90

ஸ்ரீ:

ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா

यस्याभवद्भक्तजनार्तिहन्तुः पितृत्वमन्येष्वविचार्य तूर्णम् ।
स्तम्भेऽवतारस्तमनन्यलभ्यं लक्ष्मीनृसिंहं शरणं प्रपद्ये ॥

1590
1-55



ஸ்ரீ கண்ணன்

ஜய ஹூ
ங்குனி மீ

ஸம்புடம் 14.
ஸஞ்சிகை 3.

l. 14. No. 3.
ARCH 1955.

வருஷச்சந்தா ரூ 3.
தனிப்ரதி அணா 4.

ഉ22m211, N4154
N55.14.3
199555

ஸ்ரீ:

விஷய ஸூசிகை

விஷயம்	பக்கம்
1. ஸம்பாதகரின் குறிப்புக்கள்	54
2. அட்டைப்பட விளக்கம்	57
3. சரமச்லோகங்கள்	58
4. ஸ்ரீ. உப. புத்தங்கோட்டகம் ஸ்வாமியின் திவ்யசரிதம்	6
5. 43-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரின் ஸஞ்சாரக்ரமம்	7

குறிப்பு:— ஸ்ரீ. உப. புத்தங்கோட்டகம் ஸ்வாமி விஷயமாக இன்னும் அனேக ஸ்வாமிகள் வ்யாஸங்களும் ச்லோகங்களும் அனுப்பியிருக்கிறார்கள். அவகாசக்குறைவினால் அவைகளை ப்ரசுரிக்கமுடியவில்லை.

ஓர் விஜ்ஞாபனம்

புத்தாண்டு சித்திரைமீ ஸ்ரீ நடாதூர் அம்மாள் திருநக்ஷத்ரத்தன்று ஓர் வித்வத் ஸதஸ் நடத்தப்படும். ஸ்ரீ அம்மாள் ஸாதித்தருளிய க்ரந்தங்கள் ப்ரபந்நபாரிஜாதம், ப்ரமேயமாலா, தத்வஸாரம் என மூன்று. அவைகளில் ஏதேனுமொன்றை அதிகரித்து ஒரு வ்யாஸமும், ஸ்ரீபாஷ்யத்தில் தத்வஸாரத்தில் எடுக்கப்பட்ட அதிகரணங்களில் ஏதாவது ஒரு அதிகரணத்தை அதிகரித்து மாலிநீ, ஶிகரிணீ, மந்தாக்ராந்தா என்கிற வ்ருத்தங்களில் ஏதாவதொரு வ்ருத்தத்தில் ச்லோகங்களும் எழுதியனுப்பவேணும். அவைகள் சித்திரைமீ 10ம்தேதிக்குள் அனுப்பப்படவேண்டும். அதை பரிசோதிக்கும் ப்ரஸித்த பண்டிதர்கள் யாரை முதலில் தேறியவராகத்தெரிவிக்கின்றார்களோ அவருக்கு ரூபாய் 25ம், இரண்டாவதாகத் தேறுகிறவருக்கு ரூபாய் 20ம், மூன்றாவதாகத் தேறுகிறவருக்கு ரூபாய் 15ம் பாரிதோஷிகம் அனுப்பப்படும். அந்வயிக்கவிரும்புகிறவர்கள் யதாஸம்ப்ரதாயம் காலக்ஷேபம் செய்தவர்களாயும் சிரோமணியாயும் இருக்கவேண்டும் என்பதாக ஸ்ரீ. உப. வித்வான், ஆசுகவி, வில்லூர் ஸ்ரீநிவாஸராகவாசார்ய ஸ்வாமி நம் பத்ரிகை மூலம் தெரிவித்துக்கொள்ளுகிறார். மற்றுமுள்ள விவரங்களுக்கு திருக்குடந்தை ஸ்ரீ அஹோபில மடத்திலுள்ள ஷை ஸ்வாமிக்கு கடிதம் எழுதித்தெரிந்துகொள்ளவும்.

ஸ்ரீ

பஞ்சாங்கஸங்க்ரஹ...

[மன்மத ஸூ உத்தராயணம் வஸந்த ருது மேஷமீ 1955ஸூ ...

15-4-55	சித்திரைமீ 2உ	வெள்ளிக்கிழமை	மேஷ க்ருஷ்ண அஷ்ட...
18-4-55	5உ	திங்கட்கிழமை	ஏகாதசி
19-4-55	6உ	செவ்வாய்க்கிழமை	த்வாதசி. ஹரிவாஸரம் 3-5
21-4-55	8உ	வியாழக்கிழமை	போதாயன அமாவாஸ்யை
22-4-55	9உ	வெள்ளிக்கிழமை	அமாவாஸ்யை
24-4-55	11உ	ஞாயிற்றுக்கிழமை	த்விதீயை - த்ருதீயை திதித்வயம்
25-4-55	12உ	திங்கட்கிழமை	சதுர்த்தி, அக்ஷயத்ருதீயை
27-4-55	14உ	புதன்கிழமை	திருவாதிரை; ஸ்ரீ பாஷ்யகாரர் திருநக்ஷத்ரம், திருவுள்ளூர் ஸ்ரீ வீரராகவன் சைத்ரோத்ஸவாரம்பம்
2-5-55	19உ	திங்கட்கிழமை	ஏகாதசி
3-5-55	20உ	செவ்வாய்க்கிழமை	த்வாதசி, ஹரிவாஸரம் 0-51, திருவுள்ளூர் ஸ்ரீ வீரராகவன் திருத்தேர்
5-5-55	22உ	வியாழக்கிழமை	ஸ்ரீ ந்ருஸிம்ஹஜயந்தி; சித்திரை; மதுரகவியாழ்வார் திருநக்ஷத்ரம்
6-5-55	23உ	வெள்ளிக்கிழமை	பூர்ணிமை
11-5-55	28உ	புதன்கிழமை	மேஷக்ருஷ்ண பஞ்சமி திதி
12-5-55	29உ	வியாழக்கிழமை	,, ஷஷ்டி திதி
13-5-55	30உ	வெள்ளிக்கிழமை	,, ஸப்தமி திதி
14-5-55	31உ	சனிக்கிழமை	வ்ருஷபரவி-40-1, விஷ்ணுபதி ஸங்க்ரமண தர்ப்பணம், சூந்யதிதி

[உத்தராயணம்— வஸந்த ருது— வ்ருஷபமீ]

15-5-55	வைகாசிமீ 1உ	ஞாயிற்றுக்கிழமை	சூந்யதிதி
16-5-55	2உ	திங்கட்கிழமை	வ்ருஷப க்ருஷ்ண தசமி திதி
17-5-55	3உ	செவ்வாய்க்கிழமை	ஏகாதசி திதி
18-5-55	4உ	புதன்கிழமை	ஏகாதசி வ்ரதம், த்வாதசி திதி
20-5-55	6உ	வெள்ளிக்கிழமை	பரணி, 39-வது பட்டம் ஸ்ரீ பராங்குச யதீந்த்ர மஹாதேசிகன் திருநக்ஷத்ரம்
21-5-55	7உ	சனிக்கிழமை	அமாவாஸ்யை
...-5-55	13உ	வெள்ளிக்கிழமை	ஷஷ்டி - ஸப்தமி திதித்வயம்
...5-55	14உ	சனிக்கிழமை	அஷ்டமி திதி
...5-55	17உ	செவ்வாய்க்கிழமை	ஏகாதசி திதி

—

...டெட் இந்தியா பிராவிடெண்ட்
இன்ஷூரன்ஸ் கம்பெனி லிமிடெட்,

ஹெட் ஆபீஸ். "யுனைடெட் இந்தியா லைப் பில்டிங்", சென்னை-1

250, 500, 750, 1000 ரூபாய்கள் வரை
வைத்தியப் பரீக்ஷை இல்லாமலே
பாலிஸிகள் வழங்கப்படுகின்றன.

1000 ரூபாய்க்கு வருஷம் ஒன்றுக்கு போனஸ் ரூ. 9

* பிராவிடெண்ட் இன்ஷூரன்ஸ் கம்பெனிகளின் சரித்திரத்திலேயே தனிச்சிறப்பு வாய்ந்தது *

எங்கும் ஏஜண்டுகள் தேவை

எங்கள் ஏஜென்ஸி கௌரவம் வாய்ந்தது.
லாபகரமானது.
ஆர்வமுடைய இளைஞர்களுக்கு எதிர்காலத்தில் நல்ல சந்தர்ப்பங்கள் இருக்கின்றன.

விபரத்திற்கு அடியில் கண்ட விலாஸத்திற்கு எழுதுக:

காரியதரிசி,
யுனைடெட் இந்தியா பிராவிடெண்ட் அஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்
யுனைடெட் இந்தியா லைப் பில்டிங், சென்னை-1

Printed & Published by Sri J. Rangachariar Swami, Srikarya
Sri Ahobilamutt, at Sri Malola Press, 30. Panagal Street, Tir
Editor Eachambadi, T. Ramaswami Aiyangar, M. A., L.
Sri Ahobilamutt Sanskrit College, Madurantakam.

𑌶𑍍𑌰𑍀𑌃

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃



ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா

ஸம்புடம் 14 } ஜய ௵ பங்குனி ௴ { ஸஞ்சிகை 3

'𑌅𑌹𑍋𑌬𑌿𑌲𑍇 𑌗𑌾𑌰𑍁𑌡𑌶𑍈𑌲𑌮𑌧𑍍𑌯𑍇
𑌕𑍃𑌪𑌾𑌵𑌶𑌾𑌤𑍍 𑌕𑌲𑍍𑌪𑌿𑌤𑌸𑌨𑍍𑌨𑌿𑌧𑌾𑌨𑌮𑍍 ।
𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍍𑌯𑌾 𑌸𑌮𑌾𑌲𑌿𑌙𑍍𑌗𑌿𑌤𑌵𑌾𑌮𑌭𑌾𑌗𑌂
𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌂 𑌶𑌰𑌣𑌂 𑌪𑍍𑌰𑌪𑌦𑍍𑌯𑍇 ॥'

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

என்னும் ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகையைப்பற்றி

ஸ்ரீ அழகியசிங்கரின் ஆசாஸந அநுசாஸநங்கள்.

𑌶𑍍𑌰𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑍍𑌰𑌿𑌯𑌾 𑌶𑍍𑌰𑍀𑌮𑌨𑍍𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌕𑌰𑍁𑌣𑍋𑌦𑌿𑌤𑌾 ।
𑌶𑍍𑌰𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌕𑌟𑌾𑌕𑍍𑌷𑍇𑌣 𑌜𑍀𑌯𑌾𑌦𑌾𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌤𑌾𑌰𑌕𑌮𑍍 ॥

𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌭𑌕𑍍𑌤𑌾𑌨𑌾𑌂 𑌗𑍇𑌹𑍇 𑌗𑍇𑌹𑍇 𑌸𑌦𑌾 𑌵𑌸𑍇𑌤𑍍 ।
𑌶𑍍𑌰𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑍍𑌰𑌿𑌯𑌾𑌹𑍍𑌯𑍇𑌷𑌾 𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑍍𑌰𑌿𑌯𑌯𑌾 𑌸𑌹 ॥

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணையால் உண்டாகி இருக்கும் இந்த 'ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா' என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்கள் உள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக்கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த 'ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா' என்னும் பத்ரிகை, ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹாலக்ஷ்மியுடன் நித்யமாக வஸிக்கக்கடவது.]

ஸ்ரீ:

ஸம்பாதகரின் குறிப்புக்கள்

योऽन्तःप्रविश्य मम वाचमिमां प्रसुप्तां
सञ्जीवयत्यखिलशक्तिधरस्स्वधाम्ना ।
अन्यांश्च हस्तचरणश्रवणत्वगादीन्
प्राणान्नमो भगवते पुरुषाय तस्मै ॥

ஜகத்ஸ்ருஷ்டியில் வேற்றுமை என்பது இயல்பு. வேற்றுமையிலும் ஒற்றுமையைக்காண்பதுதான் மேன்மை. அப்படிக்கின்றி வேற்றுமையை ஒழித்தல் வேண்டும் என்பதுமடமை. வேற்றுமையை ஒழிக்கவும் முடியாது. ஒழிக்க முயல்வதும் இயற்கைக்கு விரோதம். ஆனாலும் இயற்கையில் உள்ள வேற்றுமைகளில் காணப்படும் பொது இயல்புகளை ஒன்றுபடுத்தி அதன் மூலமான ஒற்றுமையை ஏற்படுத்த நாம் முயற்சிக்கலாம். முயற்சிக்கவும் வேண்டும். இம்முயற்சியின் மூலமாகத்தான் நாம் உலகில், ஸமூஹத்தில் ஓர் ஸௌஜன்யத்தை நிலைநாட்டமுடியும்.

ஆஸ்திக்யம் குறைந்து நாஸ்திக்யம் தலை தூக்கி நிற்கும் இந்நாளில், பொருளாதார தாரதம்யத்தின் காரணத்தினால் பலர் பலவிதமாகப் பேசுவதை நாம் கேட்கிறோம், படிக்கிறோம். பகவத்ஸ்ருஷ்டியில் காணப்படும் ஜாதி பேதங்களை ஒழிக்கவேண்டும் என்ற மனோநிலையும் இதே காரணங்களினால்தான் ஏற்படுகிறது. இம்மனோநிலைக்கு நம்மில் பலரே காரணம் எனக்கூறலாம்.

வேதோக்தமான தர்மங்களைச் செவ்வனே செய்தும், ஸதாசாரவழியே நடந்தும் நம்முன்னோர்கள் ஸந்தோஷத்துடன் காலங்கழித்தார்கள் எனக்கூறமுடியும். ப்ராசீன தர்மங்களைப் புறக்கணித்து உலக வாழ்வே முக்யம் என்று எப்பொழுது நம் முன்னோர்கள் எண்ணவாரம்பித்தார்களோ அப்பொழுதே நமக்கு கஷ்டகாலம் ஆரம்பமாயிற்று. நமக்கென்று ஏற்பட்ட தர்மாநுஷ்டானங்களை விட்டு விட்டு, பிறர்களுக்கு ஸமமாக உலக வாழ்க்கையிலும், அதற்காகப்பொருள் தேடுதலில் ஈடுபடவாரம்பித்ததும் அதில் போட்டியிடுபவர்கள் நம்மை விரோதிகளாக எண்ணலாயினர். நமது அறிவினால் நாம் பொருள் ஸம்பாதிப்பதிலும் முன்னேற ஆரம்பிக்கவே, அக்கலையில் ஸாமர்த்தியம் இல்லாதவர்கள் நம்மைக் கண்டு பொறாமை கொண்டனர். இப்படி காலசக்கரம் சுழலவாரம்பித்தது. நாளடைவில் ஐச்வரியம் தேடுதலே முக்யமான புருஷார்த்தம் என நாம் எண்ணும் நிலை ஏற்பட்டது. **'देवं सेवितुमेव निश्चिनुमहे'** என்றும், **'अस्ति मे हस्तिशैलाग्रे वस्तु पैतामहं धनम्'** என்றும் ஸ்ரீஸ்வாமி திருவாய் மலர்ந்தருளும் நன்னாளில் இம்மாதிரியான ஜாதித்வேஷங்கள் தலைதூக்கி நிற்கவில்லை எனச் சரித்திரவாயிலாக நாம் கூறமுடியும்.

வேஷத்திற் கேற்ப நடிப்பது அவசியம் என்பது போல, எடுத்துக்கொண்ட முயற்சிக் கேற்ப நமது நடை உடை பாவனைகளும் மாறுபட்டன. ஜாதி வித்யாஸமின்றி தோற்றமளிப்பதும், உண்பதும் உறங்குவதும் ஸர்வஸாதாரண தர்மங்களாக மாறிவிட்டன. இதுவே கலியன் கொடுமை. இந்த நிலையில் தான் **'जन्मना ब्राह्मणो ज्ञेयः'** 'பிறப்பினாலே மட்டில் அந்தணன்', என்ற உணர்ச்சிக்கு ஓர் எதிர்ப்பு ஏற்பட்டது. ஒருவர் ஸர்வவர்ணத்தவர்களும் உபயோகிக்கும் ஓர் போஜனசாலையில் சிற்றுண்டி அருந்திவிட்டு தேவாலயத்திற்கு வந்து தனக்கேற்பட்ட பணியிலமர்ந்தார். பகவத்தர்சனத்திற்கு வந்த ஓர் ப்ராமஹணோதான் (இவருடன் புஜித்தவன்) அங்கு அவரின் நடத்தையைக் கண்டித்தான் எனில், இது யாருடைய குற்றம். ஆகவே ஸர்வஸாதாரணமான ஸஹபங்க்தி போஜனந்தான் நமது ஸமூஹ தர்மங்களை இழிவு படுத்துகிறது எனக்கூற முடியும். நமது ஸமூஹத்தினரிடையே காணப்

படும் வேஷ, பாஷணுதிகளேக் காட்டிலும் இம் மாதிரியான போஜன வில்க்கின்மைதான் நம்மை இழிவுபடுத்துகிறதென்பதில் ஐய மில்லே.

ஆஹார சுத்தியினுல்தான் நமது மனேநிலே சுத்தமாயிருக்கும் என்பது நமது முன்னேர் களின் தீவிரமான எண்ணம். இந்த உண் மையை யார் மறக்க முடியும். வைத்ய சாஸ்த் ரத்தின் படியும் நமது சரீரஸ்திதியை அநுஸ ரித்து நாம் உட்கொள்ளவேண்டிய உணவும், வஸ்துக்களும் வேறுபடுவதில்லேயா? தடுக்கப் பட்ட வஸ்துக்களே உட்கொண்டால் நமது தேஹநிலே கெட்டுவிடுகிறதல்லவா? இதிலி ருந்து நாம் அறிவது என்ன? ஒவ்வொரு உணவுப் பொருளுக்கும் ஒருவித குணத்தை உண்டாக்கும் சக்தி உண்டு. சரீர இயல்புக்கும் மனே இயல்புக்கும் ஏற்ப நமது ஆஹாரத் திற்கு உபயோகிக்கும் பொருள்களே நாம் வகுத்துக்கொள்ளவேண்டும். காட்டில் உள்ள விலங்குகளுக்குள்ள சரீர அமைப்பு அதற்குக் கிடைக்கும் ஆஹாரத்திற்கேற்ப காணப்படு கிறது. ஆனுல் நமது தேஹ அமைப்பு அப்படி இல்லேயே. நமது மனேநிலேயும் அதைக்காட்டி லும் உயர்ந்ததல்லவா. ஆகவே நமது மனே நிலேக்கேற்ப உயர்ந்த பொருள்களேயல்லவோ நாம் உட்கொள்ளவேண்டும். வஸ்துக்களேப் பொறுக்கி எடுப்பதுபோல், போஜனவேளே யில் உள்ள மற்ற தீயசக்திகளேயும் விலக்கவும் வேண்டும். "தீயவர் கண்படுஞ்சோறு" விலக் கத்தக்கதே என்று ஸ்ரீஸ்வாமி தேசிகன் ஆஹாரநியமத்தில் இதனுல்தான் குறிப்பிட் டுள்ளார். நமக்கேற்பட்ட பல கார்யங்களுக்கு நியமங்கள் ஏற்பட்டிருப்பதுபோல் நமது போஜனவேளே, போஜன வஸ்துக்கள், இடம் முதலியவைகளுக்கும் நியமங்களுண்டு. நியமங் கள் இல்லாமல் எந்தக்கார்யங்கள் நடக்கமுடி யும். "இனிமையுடனுதாமில்லாதார் சோறும்" "மனிசர் எலிகுக்குடங்கள் காகம் பூனே வாய்க் கொண்ட சோறும்" விலக்கவேண்டியவைகளே. நமது பகுத்தறிவுக்கும் இவ்வுண்மைகள் நன்கு புலப்படும்.

உணவுப்பொருள்களாக எதை எதை நாம் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்பதுபோல் உண வருந்தும் காலங்களும் நிர்ணயிக்கப்பட்டிருக் கின்றன. அகால போஜனம் சரீரத்திற்குக் கெடுதி என்பதை யார் மறுக்கிறுர்கள். அதே போல்தான் ஒதுக்கப்பட்ட தினங்களும்கூட. ஏகாதசி போன்ற வ்ரததினங்களே அநுஷ்டிப் பதும் சரீர இயந்திரங்களின் நன்மைக்காகவே தான். இவ்விதம் நமது பழக்கவழக்கங்களில் ஒவ்வொரு சிறிய விஷயத்திலும் பல நுட்ப மான கருத்துக்கள் அடங்கியிருப்பதினுல் ப்ரா சீன பழக்கவழக்கங்களே நாம் புறக்கணிப்பது என்பது மதியின்மை. ஆனுல் அவைகளில் உண்மையான தத்துவங்களே பெரியோர்களி டம் கேட்டறிவதும் அவைகளின்படி நடப்ப தும் நமக்கும், நமது ஸமூஹத்திற்கும் நன்மை பயக்கும்.

இந்தியாவில் ஒரு குறிப்பிட்ட மதத்துக்கு அங்கீகாரமோ ஆதரவோ அளிப்பதற்கில்லா மல் ஓர் மதசார்பற்ற அரசாங்கம் இருந்த போதிலும், "மக்கள் தங்கள் தங்களுடைய மத வழிபாட்டில் ஈடுபடுவதை அரசாங்கம் தடுக்க வில்லே" என்றும் "பெரியஜ்ஞானிகளின் உப தேசங்கள், வாழ்க்கை முறை முதலியவற்றை எடுத்துக்காட்டுவதன் மூலம்தான் மத உணர்ச் சியை நம்மாணவர்களிடையே ஏற்படுத்தமுடி யும்" என்றும் ஒருசில கல்வி ஸ்தாபனங்கள் மத உணர்ச்சிக்கு ஜ்ஞாபகார்த்தமாகவும், பக்தி யின் சின்னமாகவும் இருப்பதாகவும் பெரிய மேதாவிகளும், கல்வித்துறையில் நன்கு அநு பவம் வாய்ந்தவர்களும் சில தினங்களுக்கு முன் நன்கு விளக்கியதை தினசரி மூலம் நாம் படித்தோம். (சுதேசமித்திரன் 7-3-55 பக்கம் 6.) இவ்வுணர்ச்சிகள்தான் நம் நாட்டின் கலேப் பண்புகள். இவைகளேத்தான் நமது முன்னேர் கள் போற்றி வந்தார்கள். இதனுல்தான் நம் நாடு ஆன்மீகத் துறையில் முன்னேற்றமடைந் திருந்தது. மனித ஸமூஹத்தில் பரஸ்பரம் சகிப்புத்தன்மை இருந்து வருவதற்கும் இவ் வுணர்ச்சிகள் மிகவும் உபகரித்தன. நாட்டில் அமைதி நிலவியது.

ஸமீப காலத்தில் இம்மாதிரியான பண் டைப் பண்புகளுக்கு உலே வைக்கும் வழிகள் ப்ராசாரப்படுத்துவதை நாம் காண்கிறேம். நமது நாட்டில் ஒரு புதிய ஸமூஹம் ஏற்பட

வேண்டும் என்றும், அப்படித்தோன்றும் ஸமூஹத்தில் "ஜாதி, மத வேற்றுமைகள் இருக்காது. ஆண், பெண் வித்யாசம் காரணமாக அந்தஸ்தில் வேற்றுமை இருக்காது" என்றெல்லாம் கூறப்படுகிறது. இவ்வாக்கியங்கள் படிப்பதற்கும், கேட்பதற்கும் மிகுந்த ஆநந்தத்தை நமக்கு உண்டாக்கலாம். ஆனால் ஆநந்தம் நீடித்திருக்குமா என்று யோசித்துப் பார்க்க வேண்டும். கூட்டத்தில் கோஷமிடுவது போல், ஒருவர் சொல்வதைப் பின்பற்றி வீண் கூச்சலிடுவதைக் கேட்டு ஆநந்திக்கலாமா? இக் கோஷங்களின் கருத்துக்கள் என்ன? இவைகளின் விளைவுகள் என்ன என்றெல்லாம் யோசித்துப் பார்த்தல் வேண்டும். பண்டைப் பழக்கவழக்கங்களையும் நன்கு யோசித்தால் உண்மை விளங்கும். இவ்வுலகில் உள்ளவர்கள் யாவரும் க்ஷேமமாகவிருக்கவேண்டும் என்றும், எல்லாம் நன்மை பயக்கவேண்டும் என்றும் கூறுவது நமது மரபு. அவரவர்களுக்கு ஏற்பட்ட கார்யங்களில் கவனம் செலுத்தி உண்மையாகப் பாடுபட்டால் மற்றவர்களுடன் ஒத்துழைப்பதாக ஆகும். மற்றவருடையபணிகளில் தலையிடுவதாக ஆகாது. அப்படியின்றி எவரும் எக்காரியத்திலும் ஈடுபடலாம் எனக் கூறும் பொழுதுதான் வீண் போட்டியும், அஸூயைகளும், மனக்கசப்பும், கலகங்களுங்கூட ஏற்படுகின்றன. எல்லா டாக்டர்களும் எவ்வித வியாதிக்கும் சிகித்ஸை செய்யும் திறமையைப் பெற்றவர்களான போதிலும், குறிப்பிட்ட வ்யாதியைத்தான் சிகித்ஸை செய்வதில் ஸாமர்த்தியம் பெற்றிருக்கிறார்கள். ஏன்? அவர்கள் விசேஷப்பயிற்சி அவைகளில்தான் பெற்றிருக்கிறார்கள். அல்லது அவர்களுடைய விசேஷ கவனம் இம்மாதிரிதான் செலுத்தப்பட்டிருக்கிறது. இதுபோலவேதான் பண்டை நாளில் ஒரு குறிப்பிட்ட ஜாதி ஒருவித கார்யத்தில் முழு கவனத்தை செலுத்தி வந்து அதில் ஸாமர்த்யத்தை அடைந்திருந்தது. காலம் போகப் போக அது மாறவாரம்பித்தது. அப்படி மாறியதன் காரணமாக இவ்வித விபாகமே வேண்டியதில்லை என்றோ, பாகுபாடு கெடுதல் என்றோ உடனே கூறிவிடலாமா. குறைகளைப் போக்குவதென்பது குறைகள் ஏற்படும் காரணங்களைக் கண்டுபிடித்து அவைகளை விலக்க முயற்சிப்பதல்லவா தகுந்தவழி. அதை விட்டு முழு ஏற்பாட்டையும் களைந்தெறிவது சரியா. ஜலதோஷம் ஏற்பட்டால் மூக்கை அறுப்பதுதானா சிகித்ஸை! உலகில் பலவித வித்யாஸங்கள் காணப்படுகின்றன. இயற்கையின் அழகு வித்தியாஸத்தினால் அல்லவா! ஒரே மாதிரித் தோற்றம் அழகைக் கொடுக்குமா! ஒரே மாதிரி புஷ்பம் சிறியது, பெரியது, கருப்பானது, சிகப்பானது என்ற காரணத்தினால் மட்டும் அழகை யூட்டுமா! பற்பல உருவங்களுடனும், வர்ணங்களுடனும், வாஸனை பேதங்களுடனும், காணப்படுவதினால் அன்றோ இயற்கையின் அழகு ரஸிக்க முடிகிறது. இதேபோல் இயற்கையில் பற்பல வேற்றுமைகளினால் தான் உலகம் நிலைத்திருக்கிறது. அதுபோலவேதான் ஸமூஹமும். ஜாதி, மதப்பற்றுகளை ஒழித்து விட்டால் ஒற்றுமை தோன்றிவிடாது. வேற்றுமைகள் வேறு உருவங்களில் இன்னும் பயங்கரமான நிலையில் தோன்றும். வேற்றுமைகளிலும் ஒற்றுமைகளை நிலை நாட்டவே நமது நாட்டில் வேதங்களும், புராணங்களும்பாடுபட்டன. நமது பெரியோர்களும் அதற்காகவே பாடுபட்டார்கள். நமது ஆன்மீக தத்துவங்களிலும் அதே உண்மைதான் வற்புறுத்தப்படுகின்றன. இவ்விதமிருக்க வெளிப்படையாகத் தோன்றும் வேற்றுமைகளைக் கண்டு மிரண்டு அவைகளை ஒழித்துவிட்டால் உலக க்ஷேமம் ஏற்படும் என்று எண்ணுவது ஸரியாகாது. நமது வாழ்க்கையில் நாம் ஒவ்வொரு நாளும் காணும் காட்சிகளை மனத்திற்கொண்டால்கூட உண்மை விளங்கும். உதாரணமாக, அரசியலில் ஈடுபட ஆசைகொண்டு பற்பல ராஜீய கட்சிகள் தோன்றுகின்றன. இவைகள் ஒரு ஸமயம் சிற்சில காரணங்களால் ஒன்று சேர்வதுபோல் காணப்படுகின்றன. ஆனால் உண்மையை நோக்கின் கட்சிப் பெயர் ஒன்றுபட்டாலும், கருத்துக்களில் வேற்றுமை கட்சிக்குள் இருப்பவர்களில் காணப்படுகிறதல்லவா. சாதாரணமான வேற்றுமைகள் அல்ல, அடிப்படை

தத்துவங்களில் கூட வேற்றுமைகள் காணப்படுகின்றன. கட்சிகளின் வெளிப்படையான கொள்கைகளுக்கும் உண்மையான அங்கத்தினர்களின் மனோ நிலைக்கும் எவ்வளவு வித்தியாஸங்களை நாம் காண்கிறோம். வித்யாஸங்களையே மறைத்து கட்சிகள் ஒன்றுபட்டதாக நாம் எண்ணுவது எவ்வளவு மதியீனம். இவ்வுண்மையை மறுக்க முடியாது. இப்போக்கைத் தடுக்கவும் முடியாது. அது உலக வழியே வந்தது. இதேபோல் தொன்று தொட்டு நல் வழி வந்ததும், ஸமூஹ ஒற்றுமைக்கு உண்மையாக உபயோகப்படுவதும். ஒவ்வொருவரும் தங்களுக்கென்று வகுத்துக்கொண்ட கார்யங்களைச் சரிவரச் செய்து வருவதால் ஒற்றுமை நிலைநாட்ட முடியும் என்பதை நாம் நன்கு உணரவேண்டும். ஒரு சில அம்சங்களை மாத்திரம் நாம் இங்கு குறிப்பிட்டுள்ளோம். உண்மையாக நமது சிறுவர்களுக்கு மதக் கல்வி அவசியம்தான் என்று பல அநுபவசாலிகள் சொல்லுவதை நமது ஸமூஹத்தில் எல்லோரும் ஸந்தோஷத்துடன் வரவேற்கவேண்டும். இதை மனத்திற்கொண்டு நமது சிறுவர்களுக்கும் அம்மாதிரி பழக்கங்களை உண்டாக்கவேண்டும். ஸமூஹ அமைப்பை நல்வழிக்குக் கொண்டுவர பாடுபட வேண்டும். அதை தகர்த்துவிட்டு அமைதியின்மையையும், புதுப்புது ப்ரச்சனைகளை உண்டாக்கிக் கொள்வதையும் தடுப்பதற்கு தீவிரமாக நாம் முயலவேண்டும்.

அட்டைப்பட விளக்கம்

ஸ்ரீ:

ஸ்ரிய:பதியான எம்பெருமான் ஸாதுஸம்ரக்ஷணார்த்தம் அநேக அவதாரங்கள் செய்து துஷ்டநிக்ரஹ சிஷ்டபரிபாலநம் செய்துவந்திருக்கிற அவதாரங்களில் மிகச்சிறந்த அவதாரம் ஸ்ரீக்ருஷ்ணவதாரம். இவ்வவதாரத்தில் எம்பெருமான்செய்த திருவிளையாடல்கள் ஒவ்வொன்றையும் எத்தனை தரம் படித்தாலும், கேட்டாலும் திகட்டாதவை. தேனினும் இனிய சுவையுள்ள அப்பேர்பட்ட அவதாரமூர்த்தியாகிய ஸ்ரீக்ருஷ்ணபகவான் இவ்வூரில்(வில்லூர்) ருக்மிணீ ஸத்யபாமாஸமேதராய் கண்கொள்ளாக்காக்ஷியாகஸேவைஸாதிக்கிறார். இவ்வெம்பெருமானுக்கு ப்ரதிவருஷம் பங்குனிமீ ரோஹிணீநக்ஷத்ரத்தில் ரதோத்ஸவம் வைத்து ப்ரஹ்மோத்ஸவம் வெகுசிறப்பாக நடைபெற்று வருகிறது. அந்த உத்ஸவத்திற்கு உள்ளூர் ஸ்வாமிகளுடன் வெளியூர்களிலிருந்தும் வேதப்ரபந்தபாராயணகோஷ்டிக்கு ஸ்வாமிகள் வரவழைக்கப்பட்டு விசேஷமாக நடத்தப்படுகிறது இவ்வெம்பெருமானை ஒருமுறை தரிசித்தவர்கள் என்றென்றும் மறவாரென்றால் இவனின் வடிவழகையென்னென்று கூற வியலும்! ஸ்ரீ அஹோபிலமடம் 41வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கர் இவ்வூருக்கு எழுந்தருளியிருந்த ஸமயம் இவ்வெம்பெருமானின் திவ்யதேஜஸ்ஸில் ஈடுபட்டு மங்களாசாஸநம் செய்தருளியாயிற்று. ஸமீபத்தில் இங்கு எழுந்தருளியிருந்த 43வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரும் இவ்வெம்பெருமானின் காந்தியைக்கண்டுமிக்க மனமுவந்து மங்களாசாஸநம்செய்தருளி இத்தலத்தில் ஸ்ரீமதாதிவண்சடகோப யதீந்த்ர மஹாதேசிகனையும் ப்ரதிஷ்டை செய்வித்தருளினர் இவ்வெம்பெருமான் பக்தர்களின் ப்ரார்த்தனைகளை மனமுவந்து ஏற்றுக்கொண்டு அவரவர்கள் அபிலாஷைகளை பூர்த்தி செய்து கொடுப்பவர். இவ் வெம்பெருமானின் இவ்வருஷ ப்ரஹ்மோத்ஸவம் நாளது பங்குனி மாதம் நடைபெறப்போகிறது. பக்தர்கள் அனைவரும் வந்திருந்து எம்பெருமானை தரிசித்து க்ருதார்த்தர்களாகும்படியாய் ப்ரார்த்திக்கிறேன்.

தாஸநு வி. எஸ். வீரராகவன்

ஸ்ரீ:

ஸ்ரீ. உப. புத்தன்கோட்டகம் ஸ்வாமியின்

சரம ச்லோகங்கள்

1

[illegible] 1

[illegible] 2

[illegible] 3

[illegible] 4

[illegible] 5

[illegible] 6

([illegible])இன்ன திதிவாரநக்ஷத்ரங்களில் ஸ்ரீஸ்வாமி பரமபதமடைந்தாரென்கிறது. ஸ்ரீவைஷ்ணவஸம்ப்ரதாயத்தில் இரண்டு சரமச்லோகங்கள் ப்ரஸித்தமாயின. நாள்தோறும் ஜபம் செய்யப்படுவதும், கீதோபநிஷத் 18-வது அத்யாயத்தில் அடங்கினதும், பார்த்தனுக்காக பார்த்தஸாரதி தேர்த்தட்டில் நின்று அருளிச்செய்ததுமான ச்லோகம் ஒன்று. கீதாசாஸ்த்ரத்தில் இதற்கு மேற்பட கேட்கவேண்டியதொன்றும் இல்லாதபடி சரமம்

(கடைசி) ஆக உபதேசிக்கப்பட்டபடியால் அது அப்பெயர் பெற்றது. மாதா பிதா முதலியவர்கள் மண்ணுலகை விட்டு மறையுங்காலத்தில் அவர்களைப்பற்றி சரமம் (கடைசி) ஆக இயற்றி படிக்கப்படுவதால் இம்மாதிரி ச்லோகங்களும் சரமச்லோகம் எனப் பெயர் பெற்றுள்ளன. முந்தியதுபோல் பிந்தியதும் ஜபார்ஹமே.

(ஜபவஷெட் ௨ தந்ராதி) ஸம்ப்ரதாயத்தை ஒட்டி முன் கூறியதே இங்கும் கூறப்பட்டுள்ளது. ஆயினும் பகவச்சரணாரவிந்தங்களை அடைந்ததாக அங்கும், ஆசார்யன் திருவடியடைந்ததாக விங்கும் அநுஸந்தானத்தில் வாசி தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்விதம் கூறலும் ஸம்ப்ரதாயமே. 'அத்ர பரத்ர சாபி நித்யம் யதீயசரணௌ சரணம் மதீயம்' என்று நாதமுநிகளின் கழல்களை எக்காலத்தும் எவ்வுலகத்தும் தமக்குத்தஞ்சமாக ஆளவந்தாரருளிச் செய்தார் காண்க.

(ஹம்ஸோபரதெவ்ய தந்ராதி) இப்பொழுது ஸ்வாமி ஒருவரே பரமபதம்அடைந்தபோதிலும் இதைப்பலபார்ச்வங்களில் இருந்தும் நன்கு நோக்குமவர்களுக்கு துறைகள்தோறும் தோன்றியுள்ள நஷ்டம் பலமடங்கு கனத்துக்காணப்படும். அந்த ஸ்வாமி பலசாஸ்த்ரபண்டிதர். ஒருகால் தார்க்கிகராகி மேதையின் மகிமையால் தர்கமழை பொழிவார். மறுகால் மஹாபாஷ்யாதிகளில் தமக்குள்ள ஆழ்ந்த அவகாஹநத்தை அழகாக வெளியிடுவார். மீமாம்ஸையில் வந்தவாரே ஆயிரமாயிரம் அதிகரணங்களின் நிர்ணயிக்கப்பட்ட ந்யாயங்களை இடங்களுக்கேற்றவாறு உதாஹரித்து ஸபையோரை உகப்பு கொள்ளச்செய்வார். ஸ்வாமியினுடைய வேதாந்த விஜ்ஞாநமோ விலக்ஷணமானது. வேதாந்தசாஸ்த்ரம்பயில, முன்சொன்னயோக்யதைகளோடு பக்திபரிபாகமும் வேண்டியதாகும். அவ்வம்சம் ஸ்வாமியிடம் அபாரமானதால் வேதாந்த சாஸ்த்ரஜ்ஞாநமும் விஞ்சியதாகவே காணப்படும். இவைகளெல்லாம் ஒருபுறம். தர்ம சாஸ்த்ரஜ்ஞாநம் உலகில் பண்டிதர்களுள்எங்கோ ஒரு இடத்தில்தான் அருமையாகவமையும். காரணம் ஒருவரிடம் பாடம் கேட்டு வருவதன்று. சிலக்ரந்தங்களை மட்டும் படிப்பதால் ஏற்படாது. பலரிடம்கேட்டு, பலகோசங்களைப்பார்த்து, மனத்தில் தரித்து, எல்லாவற்றிற்கும்மேலாக லோகாநுஷ்டான அனுபவங்களை கூர்ந்து கவனித்து, தர்மசாஸ்த்ரம் சொல்லவேண்டும். அதில் நம் ஸ்வாமி மிகவும் ஸமர்த்தர். தெரிந்ததை கேட்போர்மனம் குளிர எடுத்துரைப்பதில் அதைவிட ஸமர்த்தர். இங்கு நினைவிற்குவந்தபடியால் ஸம்ஸ்க்ருத பாஷையைப்பற்றியும் ஓரிரு வார்த்தைகள் எழுதவேண்டியதவச்யமாகிறது. ஒருபாஷையே பலசாஸ்த்ரங்களைக்கொண்டிருப்பதும், ஒவ்வொரு சாஸ்த்ரமும் ஆயுளுள்ளளவுமுழைத்தாலும் மேன்மேலும் இடமுடையதாகவே காணப்படுவதும், ஒரு சாஸ்த்ரத்தில் மஹாமேதாவிகூட, மறுசாஸ்த்ரத்தில்வந்தவாரே மயங்கும்படி ஒவ்வொன்றும் தமக்கே உரியதான தனி நடைகளைப் பெற்றிருப்பதும், வேறுஎந்தபாஷையில் நாம் காணக்கூடும். இவ்விதம் பலதுறைப்பட்ட பாண்டித்யசோபிதராய் திகழ்ந்த இந்தஸ்வாமி ஒருவரே மறைந்திருந்தும் பலஇடங்கள் சூன்யமாயினபோல் நாம் உணர்கிறோம்.

(ததாவ்ருக்ஷ ௨ தந்ராதி) ஸ்ரீமத் ஸ்வர்ணம் ஸ்வாமியின் திருவடிகள் இரண்டும், மிகவுமுயர்ந்த ஒரு பிறவி எடுக்க நினைத்தன போலும். வலது திருவடியின் அவதாரம் ஸ்ரீமத்

வேதமார்க்கேத்யாதி இஞ்சிமேடு ஸ்ரீ அழகியசிங்கர் எனக் கொண்டோமானல், மற்றது நம் ஸ்வாமியாக அவதரித்தது என்னலாம். ‘ராமாநுஜபதச்சாயா’ என்று, சிஷ்யர்களை ஆசார்யர்களின் திருவடியாகவோ, அதைச்சார்ந்த வஸ்துக்களாகவோ அநுஸந்திப்பதுண்டிறே, அவைகள் பிறந்த பயன் பெற்றன என்னலாம்படி வித்யாவிநயஸம்பன்னர்களான விவித சிஷ்யர்களைப் பெற்று இப்பூமிக்கு பூஷணமாக நெடுங்காலம் விளங்கின. பிறகு ப்ரயாணத்தில் வலது பாதம் முன் செல்லுவது என்றொரு க்ரமம் உண்டாகையால், வலது திருவடி தன் அவதாரஸமாப்தியைச் செய்து சென்ற பிறகு மற்ற ஒரு திருவடியும் இதோ இப்பொழுது தீர்த்தம் ப்ரஸாதித்துச் சென்றுவிட்டதைக் காண்கிறோம். வித்யாவம்சத்தில் ஒருவயிற்றுச்சஹோதரர்களாகிய நம் ஸ்ரீ அழகியசிங்கரும் நம் ஸ்வாமியும் பிரிந்தகாலத்தின் இழவுகளெல்லாம் தீரும்படி இருவர்களாக பரமபதத்தில் பரஸ்பரம் தழுவிக்கொள்ளும் காக்ஷி நமது அகக்கண்ணுக்குப் புலனாகிறது.

(புத்தங்கோட்டகம் இத்யாதி) “ஶுசீநாம் ஶ்ரீமதாம் கேஹே யோகப்ரஷ்டோ அபிஜாயதே” என்று ஒரு ஶாஸ்த்ரம்கூறுகிறது. ஸ்வாமி திருமாளிகையின் பூர்வபுருஷர்கள் மிகவும் பரிசுத்தர்களாகவும், அதோடு சேரச்சேர்த்தியாக ஸ்ரீமான்களாகவும் இருந்ததும், ஸ்வாமியோ பால்யமேதுடங்கி ஒரு யோகியெனவே வாழ்ந்துவந்ததும், கண்கூடு. ஆகையால் யோகத்தில் விட்டகுறையை நிறையாக்கவே ஸ்வாமி இங்கு இந்தத் திருமாளிகையில் வந்தவதரிக்கும்படி இருந்ததென்பதே பலரின் துணிபு. ஸ்வாமி விஷயபோகங்களில் விரக்தராய் இருந்தமைக்கு, அதிபால்யத்தில் பத்நியைப்பிரிந்தும் மறுமணஞ்செய்ய மறுத்த ஒரு வ்ருத்தாந்தமே தக்கசான்றுபகரும். பெருமாள்பொன்மிதையைக்கைக்கொண்டு யஜ்ஞாதிகளையநுஷ்டித்துப்போந்தாற்போல், ஸ்வாமியும் பொழுது இனிதே கழிய யதீச்வரஸரஸ்வதியைத் துணையாக ஏற்றுக்கொண்டு “ஶ்ரீரங்கோபவநதடீஷு வஸ்துமீஹே” என்று மஹநீயர்களும் மநோரதிக்கும்படியான மநோஹர உத்யான உல்லஸிதமான ஸ்ரீரங்கத்தில் நித்யவாஸ ரஸிகராய் எழுந்தருளியிருந்தார்.

(ஶதேஷு ஜாயதே ஶூர இத்யாதி) ‘வக்தா ஶதஸஹஸ்ரேஷு’ என்று, பல்லாயிரத்துக்கொருவர் பேச்சாளராய்ப் பிறக்கின்றனர். அதிலும் தாயைப்போல் ப்ரியமாயும் தகப்பனைப்போல் ஹிதமாயும் பேசவல்லவர் வெகு சிலரே. பாமரரையும் விரும்பிச்சென்று தத்வ உபதேசம் செய்வாரை இவ்வுலகில் காண்பதரிது. ஸ்வாமி மேல் கூறிய குணங்கள் அனைத்தும் வாய்க்கப்பெற்றிருந்தார்.

உ.வே., வில்லிவலம், நாராயணாசார்ய:
மதுராந்தகம், 7–3–55.

2

ஶ்ரீபாஷ்யாதிப்ரபந்தாந் ஸகலஹிதகராந் ஶ்ரீரஹஸ்யத்ரயாத்யை:
ஸாராந் திவ்யாஶ்ச ஸூக்தீ: ஶமதமநிரதாந் ஸம்ப்ரதாயாவிசேதை: ।
ஶிஷ்யேப்ய: ஸாந்த்ரிதேப்யோ ஹ்ருதிஶமவதி ஸம்பாதயந் யோ நித்யஶ்ரேஷ்டோ
வாக்யுக்த ஶ்ரீநிவாஸாஹ்வயவிபுதமணி: பாது விஷ்ணோ: பதம் ஸ: ॥ 1

(தொடர்ச்சி 83-ம் பக்கம் பார்க்க)

ஸ்ரீ:

ஸ்ரீ அஹோபிலமடம் ஆஸ்தானவித்வான், தேசிக
தர்சந விஜயத்வஜ, ஸ்ரீ. உப. புத்தங்கோட்டகம்

-:● ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி ●:-

ஸ்ரீ:

ஸ்ரீ. உப, வித்வான், புத்தன்கோட்டகம், ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமியின்

திவ்ய சரிதம்

ஸ்ரீ ஸ்வாமியின் அவதாரஸ்தலம்

ஸ்ரீ விஷ்ணுபுராணத்தில் 'அத்ராபி பாரதம் ச்ரேஷ்டம் ஜம்பூத்வீபே மஹாமுநே। யதோ ஹி கர்மபூரேஷா' என்று ஜம்பூத்வீபத்திற்குள் பாரதவர்ஷம் என்கிற தேசமானது புண்யபூமியாகையாலே உயர்ந்தது என்று பராசர ப்ரஹ்மர்ஷியாலே கொண்டாடப்பட்ட பாரதபூமியில், அதிலும், 'கலௌ கலு பவிஷ்யந்தி நாராயணபராயணா:। க்வசித் க்வசிந் மஹாராஜ த்ரவிடேஷு ச பூரிச:' என்று பாகவதத்தில் சொல்லுகிறபடியே நாராயணபராயணர்களான மஹாபாக்யவான்கள் அவதரிக்குமிடமான தமிழ் நாட்டிலும், அதிலும் 'வையமுய்ய வளங்கொடுக்கும் வருபுனலம்பொன்னி' என்கிறபடியே நீர்வளத்தின் பெருமையாலே ஸர்வப்ராணிகளும் இவ்வுலகத்தில் ஸுகமாக ஜீவித்திருக்கவும், 'கங்கையிற் புனிதமாய காவிரி' என்கிறபடியே ஸர்வபாபங்களைப் போக்குகிற பரிசுத்த தீர்த்தமாக இருக்கையாலே ஸர்வ ப்ராணிகளுக்கும், பரலோகத்திலும் பேரின்பத்தை அடைந்திருக்கவும் காரணமான காவிரி நதியினால் சூழப்பட்டதான சோளதேசத்தில், அதிலும், ஸ்ரீ ராமாவதாரத்தில் 'ராமஸ்ய விதிதாகாரா: த்ருஷ்ட்வா ஸர்வே வநவாஸிந:' என்றும் 'பும்ஸாம் த்ருஷ்டிசித்தாபஹாரிணம்' என்றும் திருமேனியினுடைய ஸௌந்தர்யாதிசயத்தில் விரக்தர்களான மஹாபுருஷர்களும் கூட மதிமயங்கிக் கிடந்ததாகச் சொல்லுகிறபடியன்றிக்கே, ஸ்ரீ க்ருஷ்ணாவதாரத்தில் 'த்ருஷ்ட்வா க்ருஷ்ணம் நயநாந்யேவா யத்ர த்ருப்தா ந ஜாயதே:' என்று ஸ்ரீ க்ருஷ்ணனுடைய திருமேனிஸௌந்தர்யத்தில் மஹர்ஷி புருஷர்களும் மோஹித்துக் கிடந்ததாகச் சொல்லாமல் அபலைகள் மாத்திரம் மோஹித்திருந்ததாக மஹர்ஷிகள் சொல்லுகையாலே, ராமாவதாரத்தைக் காட்டிலும் ஸ்ரீ க்ருஷ்ணாவதாரத்தில் ஸௌந்தர்யம் கொஞ்சம் குறைவாக இருக்கலாமென்று மந்தமதிகள் ப்ரமிக்காதபடி க்ருஷ்ணரூபமான அர்ச்சாவதார ரூபத்திலும் கோபில கோப்ரளயாதிமஹர்ஷிகளும் கூட மதிமயங்கி இருக்கும்படி செய்ததாய் இக்கலியுகத்து புருஷர்களுக்கும் கூட த்ருஷ்டிசித்தாபஹாரியான 'அல்லலின்பம் அளவிறந்தெங்கு மழகமர் சூழ் ஒளியன்' என்கிறபடியே அளவிறந்த அழகமைந்த அர்ச்சாவதாரமான கோபாலரூபத்தையுடைய ஸர்வேச்வரன் நித்யவாஸம் பண்ணுகையினாலே தக்ஷிணத்வாரகையென்று ஸுப்ரஸித்தமான திவ்யதேசத்தின் தக்ஷிணபார்ச்வத்திலிருக்கும்தாய்; நிர்தோஷர்களான நித்யமுக்தர்கள் வஸிக்குமிடமாகையினாலே நாகம் என்று ச்ருதிப்ரஸித்தமான ஸ்ரீவைகுண்டம்போலே சிந்தையாலும் சொல்லினாலும் செய்கையாலும் தேவபிரானையே தஞ்சமாகச் சிந்தித்திருக்கும் ஸ்ரீவைஷ்ணவர்களுடைய வாஸஸ்தலமாயிருந்ததனாலே இந்த பூமியிலும் நாகை என்று ப்ரஸித்தமானதோர் கிராமத்தில் மாதுலக்ருஹத்தில் ஸர்வாதிசாயிகளான மஹாமஹிமைகளோடெழுந்தருளி இருந்ததினாலே மஹாசார்யர் என்று ஸுப்ரஸித்தராய் விளங்கின தொட்டையாசார்யர் முதலான அநேக மஹாவித்வான்களினால் அலங்கரிக்கப்பட்டதான வாதூலவம்சத்தில் 'எழாட்காலும் பழிப்பிலோம்' என்கிறபடியே ஸப்தபூருஷ ஸ்ரீவைஷ்ணவராய், ஸதாசாரஸம்பந்நராய் எழுந்தருளியிருந்த ஸ்ரீ. உப. லக்ஷ்மீநரஸிம்ஹாசார்யருக்குக் குமாரராய் ப்ரமாதி வருஷம் தை ஹஸ்த நக்ஷத்ரத்தில் அவதரித்தார்.

இந்த ஹஸ்தநக்ஷத்ரமானது முக்திதரும் நகரேழில் முக்கியமாம் கச்சிதன்னில் ஸர்வஜன ஸம்ரக்ஷணார்த்தமாய் அவதரித்த அத்திகிரி

அருளாளப் பெருமாளுடைய அவதாரத் திருநக்ஷத்ரமாகையாலும், அந்தகாரத்தைப்போக்கி ப்ரகாசத்தைத் தருகிற ஸூர்யனை தேவதையாக உடையதாகையாலும், அஜ்ஞாநாந்தகாரத்தைப் போக்கி ஜ்ஞாநப்ரகாசத்தைத் தந்து ஸம்ஸாரஸமுத்திரத்தில் மூழ்கிக்கிடந்த ஆத்மாக்கள் கரையேற ஹஸ்தாவலம்பனமாக இருந்த ஸ்ரீ கூரத்தாழ்வான் போன்ற பூர்வாசார்யர்களுடைய அவதாரநக்ஷத்ரமாகையாலும் 'ஹா ஹஸ்தே ஹஸ்தநக்ஷத்ரே' என்று புராணத்தில் புகழப்பட்டிருக்கிறது.

அந்த புண்யகாலத்தில் பிறந்த அக்குழந்தைக்குத் தகப்பனாரான ஸ்ரீ லக்ஷ்மீநரஸிம்ஹாசார்யர் பரமவைதிகராகையாலே அப்போதே ஜாதகரணத்தையும், தாம் திருவேங்கடமுடையானை ஸேவித்து வந்த பிற்காலத்தில் பிறந்தபடியினாலே அவ்வெம்பெருமானுடைய வநுக்ரஹத்தினால் பிறந்ததாகநினைத்து 'ஸ்ரீநிவாஸன்' என்று நாமகரணத்தையும், மற்றும் உபநயநாந்தஸம்ஸ்காரங்களை யதாகாலம் சாஸ்த்ரப்படி செய்துவைத்தார். இதற்குள் அக்குழந்தைக்கு 6-வது வயதிலேயே மஹாகுணநிதியாயிருந்த தாயாருடைய வியோகம் ஸம்பவித்தது. பிறகு ப்ரதமாச்ரமியான ஸ்ரீநிவாஸாசார்யர் ஸ்நானஸந்த்யாவந்தனாதிகளான தனதாச்ரமதர்மங்களை யதாகாலம் அநுஷ்டித்ததோடு அந்த க்ராமவாஸிகளான வைதிகர்களிடம் குற்றமின்றிக் குணம் பெருக்கிக் குருக்களுக்கநுகூலராயிருந்து, தர்மாநுஷ்டானத்திற்கவச்யாபேக்ஷிதங்களான வேதபாகங்களையும் அத்யயனம் பண்ணினார். பிறகு லக்ஷ்மீநரஸிம்ஹாசாரியர் அக்குழந்தைக்கு அக்காலத்தில் ஸ்ரீ அஹோபிலமடத்தின் ஆஸ்தானத்தில் 36-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராயெழுந்தருளியிருந்த ஸ்ரீமத்வேதமார்கேத்யாதியான ஸ்ரீவண்ஶடகோப ஸ்ரீ ஸ்ரீநிவாஸயதீந்த்ரமஹாதேசிகனிடம் பஞ்சஸம்ஸ்காரங்களைச் செய்து வைத்தார். பிறகு அக்குமாரருக்கு 14 வயதுக்குள்ளேயே ஸத்குலப்ரஸூதையாய் குணவதியாய்ஸதாசாரமுள்ளவளான ஓர் கன்னிகையை விவாஹம் செய்துவைத்தார்.

இப்படி க்ருஹஸ்தாச்ரமத்தை யடைந்த ஸ்ரீநிவாஸாசார்யர் ஸ்வாச்ரமதர்மங்களை யதாசக்தி அநுஷ்டித்துக்கொண்டு ஸ்வக்ராமத்திலும் ஸமீபக்ராமத்திலுமிருந்த ஸம்ஸ்க்ருதபண்டிதர்களான ஸ்ரீ வைஷ்ணவர்களிடம் ஸம்ஸ்க்ருதகாவ்யநாடகாலங்காரக்ரந்தங்களை யெல்லாம் வாசித்து, ஸம்ஸ்க்ருதபாஷையில் இவர் 'ஸர்வஜ்ஞர்' என்று பண்டிதர்களால் ஶ்லாகிக்கப்பட்டவராக இருந்ததோடு, தர்க்கம், வ்யாகரணம் முதலிய ஶாஸ்த்ரங்களிலும் விசேஷ பாண்டித்யத்தை அடையவேணுமென்று மிக ஆஸ்தையோடிருந்தார்.

வித்யாப்யாஸம்

ஸ்ரீ ஸ்வாமி பால்யாவஸ்தையிலேயே தன்னுடைய க்ராமத்திலும் ஸமீபக்ராமங்களிலும் இருந்த ஸம்ஸ்க்ருதஜ்ஞாநாதிகர்களான ஸ்ரீவைஷ்ணவர்களிடம் காவ்ய நாடகாலங்கார க்ரந்தங்களை எல்லாம் அப்யஸித்து, அந்த க்ரந்தங்களில் ஸம்பூர்ண பாண்டித்யம் பெற்றபிறகு ஸாமான்ய சாஸ்த்ராத்யயனத்தில் அதிக ஆஸ்தையினாலே திருக்குடந்தையில் வராஹபுரத்தெருவில் ஜ்ஞாநாதிக்யத்தினாலே சது:சாஸ்த்ர வேதகல்பதருவென்று ஸுப்ரஸித்தராய் அநுஷ்டான வைராக்ய பகவத்பக்தி ஸம்பூர்ணராய் அநேக வித்யார்த்திகளுக்கு ஸாமான்யசாஸ்த்ரங்களை உபதேசித்துக்கொண்டிருந்த ஸ்ரீ. உப. சேஷாசார்யர் ஸ்வாமியை யாச்ரயித்து வ்யாகரணசாஸ்த்ரத்தை ஸம்பூர்ணமாகவும் தர்க்கசாஸ்த்ரத்தில் ப்ரகரணக்ரந்தங்களையும் அத்யயனம் பண்ணினார்.

பிறகு குடந்தையில் வஸிக்கமுடியாததினால் ஸ்ரீரங்கத்தில் வஸித்த, திருப்புட்குழிஸ்வாமி சிஷ்யராய் தர்க்கஶாஸ்த்ரத்தில் ப்ரஸித்த பண்டிதராய் யிருந்த பீமாசார்யரென்கிற மத்வமதஸ்தரான மஹாவித்வானிடத்தில் 'பஞ்சலக்ஷணீ' முதலிய தர்கஶாஸ்த்ரத்தின் வாதக்ரந்தங்களை அப்யஸித்து அந்த ஶாஸ்த்ரத்தில் புதுக்கோட்டை, கொடியாலம் முதலிய மஹாவித்வான்களுடைய ஸபைகளில் பரீக்ஷை கொடுத்து ப்ரதான வித்வானாக ஸம்மானிக்கப்பெற்றார்.

பிறகு ஸ்ரீமதஹோபிலமட திவ்யாஸ்தானத்தில்

38-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தயிளியிருந்த ஸ்ரீமத்வேதமார்கேத்யாதி ஸ்ரீவண்ஶடகோப ஸ்ரீ ஸ்ரீநிவாஸஶடகோப யதீந்த்ர மஹாதேசிகனிடத்தில் (திருக்குடந்தை)மீமாம்ஸாஶாஸ்த்ராந்தர்கதமான பாட்டதீபிகையை அத்யயனம் பண்ணினர்.

புன்பு, ஆத்மரக்ஷாபேக்ஷிதமான அத்யாத்மக்ரந்தகாலக்ஷேபத்தில் அதிக ஶ்ரத்தையினாலே ஸ்வயம்வ்யக்தக்ஷேத்ரமென்று ப்ரஸித்தமான 'ஸ்ரீமுஷ்ணக்ஷேத்ரத்தில்' நித்யவாஸ ரஸிகராய், ஜ்ஞானம், வைராக்யம், அநுஷ்டானம், பகவத்பக்த்யாதி ஸகல கல்யாணகுணநிதியாய் எழுந்தருளியிருந்தமையாலும், திருமேனியின் ஸௌந்தர்யாதிசயத்தினாலும் 'ஸ்வர்ணம்ஸ்வாமி' என்று ஸுப்ரஸித்தராய் எழுந்தருளியிருந்த ஸ்ரீ. உப. வித்வான், க்ருஷ்ணமாசார்யர் ஸ்வாமிஸந்நிதிக்குப்போய் அனேகாவர்த்திகள் ஸாஷ்டாங்கமாக தண்டன் ஸமர்ப்பித்து 'ശ്രുതം ഹ്യേവ മേ ഭഗവദ്ദൃശേഭ്യഃ തരതി ശോകമാത്മവിദിതി | സോഽഹം ഭഗവശ്ശോചാമി | തം മാ ഭഗവാൻ ശോകസ്യ പാരം താരയതു |' என்று உபநிஷத்துக்களிலும், 'കാർപ്പണ്യ ദോഷോപഹതസ്വഭാവഃ ശിഷ്യസ്തേഽഹം ശാധി മാം ത്വാം പ്രപന്നം' என்று பகவத்கீதையிலும் சொல்லுகிறபடியே ஸாஞ்ஜலிபந்தராய் ப்ரார்த்தித்துநிற்க, ஸ்ரீ க்ருஷ்ணமாசார் ஸ்வாமியும் எற்கனவேபல வித்வான்கள் முகமாகக்கேள்விப்பட்டிருந்த இந்தஸ்வாமியினுடைய ஜ்ஞானனுஷ்டானதி குணபூர்த்திகளைத் திருவுள்ளமுகந்து அவரை சிஷ்யராகத் திருவுள்ளம் பற்றி, ஸ்ரீபாஷ்யாதி க்ரந்தசதுஷ்டயங்களையும், சததூஷணீ முதலிய வாதக்ரந்தங்களையும் சிஷ்யரிடமுண்டான க்ருபாதிசயத்தினல் தமது ச்ரமத்தைப் பாராமல் அத்யல்பகாலத்திலேயே ஸம்பூர்ணமாக உபதேசிக்க, ஸ்ரீஸ்வாமியும் ஸதாசார்யானுக்ரஹத்தினலுண்டான புத்திசக்தியின் மஹிமையினலும், எற்கனவே அத்யயனம்பண்ணப்பட்ட ஸாமான்ய ஶாஸ்த்ரஜ்ஞானத்தி னுபகாராதிசயத்தினலும் ஆசார்யோபதிஷ்டங்களான ஸகல ஶாஸ்த்ரார்த்தங்களையும் ஸக்ருதுபதேசத்தினலேயே அந்யூநாதிரிக்தங்களாக க்ரஹித்து, அனவரத பரிசயத்தினலே சிலையில் வெட்டிய எழுத்துக்கள்போல் தமது மனதில் ஸ்திரமாக விளங்கியிருக்கும்படி செய்துகொண்டார்.

பிறகு தமக்குத் திருமந்த்ரார்த்தத்தை யுபதேசித்து உபாயத்தில் த்வரையை யுண்டாக்கியருளிய ஸ்ரீ ஸ்வர்ணம்ஸ்வாமி திருவடிகளே இங்குமங்கும் தஞ்சம் என்று அத்யவஸித்து 'ഗുരവേ ദൈവതായ ച | ശ്രാവ്യായ ശ്രാവകായ' என்றபடி வரித்து ஆத்மயாகத்தை அந்த ஸ்வாமிஸந்நிதியிலே அநுஷ்டித்து முடித்தார்.

பிறகு, ஆசார்யனிடம் நியமனத்தைப் பெற்று, தமது க்ராமத்திற் கெழுந்தருளி ஆசாரயானுக்ரஹமூலமாகத் தமக்குக் கிடைத்த அத்யாத்மஶாஸ்த்ரஜ்ஞானத்தை அகிஞ்சனன் மஹாநிதியைப் பெற்றுப்போலே நிச்சயித்து அத்யந்த ஸந்துஷ்டராய் ஸர்வகாலங்களிலும் ஸ்ரீபாஷ்யாதி க்ரந்தபரிசயத்தினலே அவ்விஷயத்தில் ஸ்திரப்ரதிஷ்டிதஜ்ஞானராய், தென்தேசத்திலுள்ள ஸகல வித்வத்ஸபைகளிலும் பரீக்ஷைகொடுத்து ப்ரதானராய்த் தேறி ஸம்மானிக்கப்பெற்றவராய், ப்ரஸித்தர்களான பண்டிதோத்தமர்களாலும் ச்லாகிக்கப்பட்ட ஶாஸ்த்ரஜ்ஞானங்களையுடையவராகவும் எழுந்தருளியிருந்தார்.

ஸ்ரீ ஸ்வாமியினுடைய ஸபாத்யக்ஷத்வம்

இப்படி ஸ்ரீ ஸ்வாமி ஸாமான்யஶாஸ்த்ரங்களிலும் அத்யாத்மஶாஸ்த்ரத்திலும் ஸம்பூர்ணஜ்ஞானராய் ஸகல பண்டிதர்களினலும் ச்லாகிக்கப்பட்வராயிருந்ததினல் தென்தேசத்திலிருக்கும் ஸகல ஸ்ரீவைஷ்ணவஸபைகளிலுமிருந்த பண்டிதர்களினலும் ஸபா ப்ரவர்தகர்களினலும் அந்தஸபையில் ப்ரதான பண்டிதராக இருக்கும்படி ப்ரார்த்திக்கப்பட்டு அவர்களின் ப்ரார்த்தனைக்கிணங்கி ஸுமார் 40வர்ஷ காலங்களாக ஸபாத்யக்ஷராக இருந்து ஸர்வ ஜனங்களும் ஸந்தோஷிக்கும்படி ஸபைகளை நடத்திவந்தார். அதுபோலவே ஸ்ரீ அஹோபிதமடத்தில் 41-வது திவ்யாஸ்தானத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருந்த

ஸ்ரீமத்வேதமார்க்கேத்யாதி ஸ்ரீவண்ஶடகோப ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹஶடகோப யதீந்த்ர மஹா தேசிகன் ஸ்ரீ ஸ்வாமியினுடைய பாண்டித்யத்தின் மஹிமையையும், அஸாதாரணமான உபந்யாஸ சக்தியையும், ஆத்மகுணங்களையும் பல தடவை நேராகக் கண்டு அதிக ஸந்துஷ்டராய் நமது ஆஸ்தானத்தில் தேவரீர் ஆஸ்தானவித்வானாக இருக்கவேணுமென்று நியமிக்க, ஸ்வாமியும் அந்நியமநத்தை சிரஸா வஹித்து அந்த அழகியசிங்கரால் ஸம்மானிக்கப்பெற்றிருந்ததோடு, பிறகு ஸ்ரீ 42-வது திவ்யாஸ்தானத்தில் மூர்த்தாபிஷிக்தராக எழுந்தருளியிருந்த ஸ்ரீமத்வேதமார்க்கேத்யாதி ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹ திவ்யபாதுகாஸேவக ஸ்ரீவண்ஶடகோப ஸ்ரீ ஸ்ரீரங்கஶடகோப யதீந்த்ர மஹாதேசிகராலும் ஸ்ரீ ஆஸ்தானவித்வானாகத் திருவுள்ளம் பற்றப்பட்டு, ஸ்ரீ அழகியசிங்கரால் ஸ்தாபிக்கப்பட்ட ஸ்ரீ மாலோல வித்வத்ஸபையிலும் ப்ரதான பரீக்ஷகராக இருந்து, அந்த ஸபையை ஸர்வரும் ஸந்தோஷிக்கும்படி நிர்வஹித்ததுடன், ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா என்னும் ஸ்ரீ மடத்தின் பத்ரிகையிலும் ஆவச்யகமான ஶாஸ்த்ரார்த்தங்களை யாவருமறிந்துகொள்ளும்படி எளிதான தமிழ்நடையில் அநேக விஷயங்களை எழுதி அச்சிடும்படி அனுப்பியிருப்பதுடன், ஸ்ரீ மடத்தின் 43-வது திவ்யாஸ்தானத்தில் மூர்த்தாபிஷிக்தராக இப்பொழுது எழுந்தருளியிருக்கும் ஸ்ரீமத்வேதமார்க்கேத்யாதி ஸ்ரீவண்ஶடகோப ஸ்ரீ வீரராகவஶடகோப யதீந்த்ர மஹாதேசிகராலும் ஆஸ்தான வித்வானாக முன்போலவே ஸ்தாபிக்கப்பட்டு ஸம்மானிக்கப்பட்டு வந்தாரென்பது யாவரும் அறிந்த விஷயம்.

ஸ்ரீ ஸ்வாமியின் தர்மாநுஷ்டாநம்

ஸ்ரீஸ்வாமி ஏழாட்காலம் பழிப்பிலோமென்கிறபடியே ஸப்தபூருஷ வைஷ்ணவர்களாய் இருமுப்பொழுதேத்தி எல்லையில்லாத்தொன்னெறிக்கண் நிலைநின்றதொண்டரான அரந்திகழும்மனத்தவர்கள்குலத்திலவதரித்தவராகையினாலே, பால்யவயதுமுதல் பஞ்சகாலபராயணராய் ‘ஸ்நாநம் ஸந்த்யா ஜபோ ஹோமோ தேவதாநாஞ்ச பூஜநம் | வைஶ்வதேவாதிதேயஞ்ச ஷட்கர்மாணி திநே திநே ||’ என்று அவச்யகர்தவ்ய ஷட்கர்மாநுஷ்டான நிரதராய் ஆசாரேஷ்வவ்யவஸ்தி என்கிறபடியே தமது உபதேசாநுஷ்டானங்களினால் பிறர்களையும் தர்மாநுஷ்டானநிரதர்களாகச் செய்வித்துக்கொண்டிருந்தது ஸுப்ரஸித்தம். ஸ்வதர்மாநுஷ்டானத்தில் அதிகமான ஆஸ்தையினாலேயே தர்மஶாஸ்த்ரக்ரந்தங்களிலும் நிஸ்ஸம்சயமான நிச்சயமான தெளிவையுடையவராய் ஸர்வதா தர்மஸந்தேஹங்களைக் கேட்கிறவர்களுக்கு தர்மார்த்தமாக தர்மோபதேஷ்டாவாக எழுந்தருளியிருந்ததோடு, லோகோபகாரார்த்தமாக அநேகம் தர்மஶாஸ்த்ரக்ரந்தங்களை எழுதி அச்சிட்டுப் பரவச்செய்திருக்கிறார்.

ஸ்ரீ ஸ்வாமியின் விஷயவைராக்யம்

அவற்றுள் அர்த்தவைராக்யம்:—

‘தவஸிஹ்ருதி தே வீர்யே கௌரவாணாம் பிதாமஹ | ஜ்ஞாநாநி அத்ருஷ்டஹவிஷ்யந்தி ஸத்வஸாம்யேஷ்வயாத்ருஹ:’ என்கிற பகவத்வாக்யத்தின்படியே தத்வஜ்ஞானவிஷயத்தில் ஸூர்யதுல்யராய், அநிஷித்தங்களான ஐச்வர்யகாமங்களைக் கூட அதிபால்யத்திலேயே அநாதரித்த வைராக்யத்தினாலே பீஷ்மன் என்று ஸுப்ரஸித்தராய், ‘ஶாந்தநவ மஹாதோ வீர்யே ஶாஸ்த்ரஜ்ஞ ஹாதாஸ்ய: | ஶம் யாதி பாண்டவ ப்ரவ்ருஷ்ணோ த்வத்தம் ஶந:’ என்று பக்தி விஷயத்திலும் பகவானால் கொண்டாடப்பட்ட பீஷ்மர், ‘அர்த்தஸ்ய புருஷோ தாஸோ தாஸஸ்த்வர்த்தோ ந கஸ்யசித் | இதி ஸத்யம் மஹாராஜ பத்தோஸ்ம்யர்த்தேந கௌரவை:’ என்று பணத்திலாசையினால் தான் துர்யோதனன் கக்ஷியில் சேர்ந்திருப்பதாக ஸத்யப்ரதிஜ்ஞை பண்ணினார். இந்த ச்லோகத்தையே த்ரோணரும் க்ருபாசார்யரும் சொன்னார்கள். ‘ஸாம்ராஜ்யமபி வா த்ரைலோக்யராஜ்யமப்யேஷ ஹயதே நாஹம் | வதமாநஸ்யாபி ஸர்வேஷு ஶாஸ்த்ரீதீதி த்யஜேயம்’ என்று ப்ரஹ்லாதன் சொன்னான். ‘ஶ்ரேயம்

ஹிம்ஸாந்ருதம் தம்ப: காம: க்ரோத: ஸ்மயோ மத: । பேதோ வைரமவிஶ்வாஸ: ஸம்ஸ்பர்தா வ்யஸநாநி ச ॥ ஏதே பஞ்சதஶாநர்த்தா ஹ்யர்த்தமூலா மதா ந்ருணாம் । தஸ்மாதநர்த்தமர்த்தாக்யம் ஶ்ரேயோர்த்தீ தூரதஸ்த்யஜேத்' என்று உத்தவகீதையில் சொல்லப்பட்டது. இப்படி அர்த்தத்தின் ஸ்வபாவத்தைச்சொன்ன பொதுவசனங்களிருக்க ப்ராஹ்மண விஷயத்தில் ப்ராஹ்மணன் அதிகமான த்ரவ்யத்தை ஸம்பாதித்தால் அது அவனுக்குமாத்திரமன்றிக்கே உலகம்முழுவதும் நாசமடைய ஹேதுவாகும் என்று பாரதம்- ஆநுஶாஸநிகபர்வத்தில் அத். 197ல் 'அநர்த்தோ ப்ராஹ்மணஸ்யைஷ யதர்த்தநிசயோ மஹாந் । ஶ்ரியா ஹ்யபீக்ஷ்ணம் ஸம்வாஸோ தர்பயேத் ஸம்ப்ரமோஹயேத் ॥ ப்ராஹ்மணேஷு ப்ரமூடேஷு தர்மோ விப்ரணஶேத் த்ருவம் । தர்மப்ரணாஶே பூதாநாமபாவஸ்ஸ்யாந்ந ஸம்ஶய: ॥ என்று சொல்லப்பட்டது. இந்தப்ரமாணவாக்யங்களையெல்லாம் நன்கு ஆராய்ந்து பார்த்த நம் ஸ்வாமி, தமது பாண்டித்யத்தின் பெருமையினல் அதிகமான அர்த்தத்தை(த்ரவ்யத்தை) ஸம்பாதிக்கக்கூடியவராயதற்குவேண்டிய லௌகிக மஹாபுருஷர்களின் ஸஹாயங்களும் பூர்ணமாகவிருந்தும் 'தஸ்மாதநர்த்தமர்த்தாக்யம் ஶ்ரேயோர்த்தீ தூரதஸ்த்யஜேத்' என்று ஹேதுநிர்தேசபூர்வகமாக விதிக்கப்பட்ட வைராக்யத்தையே தமக்கு பூஷணமாக பாவித்து ப்ரகாசித்துவந்தார்.

க்ரந்தகாலக்ஷேப மஹிமை

இப்படி அதிபால்யததிலேயே ஸம்ப்ரதிபந்நஜ்ஞாநாநுஷ்டாந வைராக்யத்தோடும் எல்லா வித்வத்ஸபைகளிலும் அத்யந்தாதிசயிதவாக்மியாய் அதி துரூஹங்களான ஶாஸ்த்ரார்த்தங்களையும் யாவரும் அதிஸுலபமாக அறியும்படியும் 'மொய்த்துக்கண்பனிசோர' என்றும், 'ஸூஜ்ஞாதஶீதநேத்ராம்பு:' என்றுஞ் சொல்லுகிறபடியே ஸ்வாநுபூத பகவத்குணநுபவத்தோடு உபதேசிக்கும்வைலக்ஷயண்யத்தை நேராகக்கண்ட ஜ்ஞாநாதிகர்களான அநேகம் பக்திமான்களான ஸ்ரீவைஷ்ணவர்கள் ஸ்வாமிதிருமுன்பேவந்து அநேகாவர்த்தி தெண்டன் ஸமர்ப்பித்து 'ஸாவர்ண்யதோஷவஹத்வஸாவ: ப்ருஷ்டாஜிஜ்ஞாஸயா ஸம்ஶ்ரிதா: । யஸ்ய யஸ்யாஹம் ஶிஷ்யேஷு ஸாஹம் ஶாயிதம் ஸ்வாம் ப்ரவக்ஷ்யே ॥' என்கிறபடியே அத்யாத்மஜ்ஞாநார்த்திகளாய் ப்ரார்த்திக்க, ஸ்வாமியும், இப்படி ப்ரார்த்திக்கிறவர்களுக் குபதேசிப்பதைக் காட்டிலும் 'ந ச தஸ்மாந்மநுஷ்யேஷு கஶ்சிந்மே ப்ரியக்ருத்தம: । பவிதா ந ச மே தஸ்மாதந்ய: ப்ரியதரோ புவி ॥' என்கிற கீதாசார்யனுடைய வசனத்தின்படியே பகவானுக்கு ப்ரியதமமான வேறு கைங்கர்யமில்லை என்று நிச்சயித்து வ்யாதிஜாலவ்யாஜாநபேக்ஷராய் பகவத்ப்ரீதியையே பரமப்ரயோஜநமாகத் தீர்மானித்து 'க்ஷமாஶீலாஸ்ஸீலக ப்ரவசநப்ரதர்ஶிநோ:' என்கிறபடியே அவர்களுக்கபேக்ஷிதங்களான ஸகல ஶாரீரகஶாஸ்த்ரார்த்தங்களையும் 'ப்ரஹ்வஹவணிவ' என்றருளிச்செய்தாப்போலே ஸரஸ, ஸ்ரள, ம்ருதுள, மனோஹரமாக உபதேசித்துத் தமது ஜீவனகாலத்தையெல்லாம் ஸபலமாகச் செய்துவந்தார்.

இப்படி இவருடைய அநிதரஸாதாரணமான உபதேசமஹிமையைக் கண்டு நாள்தோறும் கூட்டங்கூட்டமாக வந்து ஆச்ரயித்து ஸ்வாமியினிடம் வேதாந்தஜ்ஞாந ஸம்பாதனம் பண்ணினவர்களை எண்ணிமுடியாது.

ஸ்ரீஸ்வாமி தமது 24-வது திருநக்ஷத்ரத்தில் ஆரம்பித்த வேதாந்தகாலக்ஷேபப்ரவசநம் 75-ம் திருநக்ஷத்ரம்வரையிலும் அநத்யயநகாலங்கள் தவிர மற்ற தினங்களிலெல்லாம் அவிச்சின்னமாக நடந்துகொண்டுவந்தது ஸுப்ரஸித்தம். இத்துடன் 'க்ஷீராத்தக்ஷதநுநிப்ராணஸந்ந்யாஷாஶ்ராவிஶோயநம் । ஶ்ரவணாவதாரஸேவா வத்ருயஶேதநஹாஹம் ॥' என்கிறபடியே

அனேக வேதாந்தக்ரந்தங்களையும் நிர்மாணம் பண்ணியருளியுள்ளார். அக்ரந்தங்கள் மேலே குறிக்கப்படும்; கண்டுகொள்க.

அதற்குப்பிறகு 'நவ ஜாநஸ்ய ஸஹோவோ நவெவ யஃவொவரஃ । தஸ்மாத்ருஜூ ஃஹா வணஂ கொ நவெஸவெத வாஸிஃஆநு ॥' என்கிற ஆளவந்தார் ஸ்ரீஸூக்தியின்படியே பெரியதொரு புண்யக்ஷேத்ரமாகையினாலே 'தென்னரங்கமென்னில் மையலேபெருகுமிராமாநுசன்' என்கிறபடியே ஸ்ரீ பாஷ்யகாரர் முதலான ஸர்வ பூர்வாசார்யர்களாலும் புருஷார்த்தமாக விரும்பி நிரந்தரவாஸம் பண்ணப்படுகிறதாய் ஆராதவருளமுதம் பொதிந்திருக்கிற கோயிலாகையினாலே பூலோகவைகுண்டமென்று ப்ரஸித்தமாயிருக்குமதாய் தென்னாடும் வடநாடும் தொழநின்ற திருவரங்கத்திருப்பதியில் நிரந்தரவாஸம் பண்ணவேணுமென்கிற ஆஸ்தாதிசயத்தினால் ஸுமார் 42வருஷங்களுக்குமுன் இந்த ஸ்ரீரங்க திவ்யதேசத்திற்கெழுந்தருளினார்.

ஸ்ரீரங்கத்திற்கு எழுந்தருளினகாலத்தில் ஸ்வாமியினுடைய ஜ்ஞாநாநுஷ்டாந வைராக்யாதி குணங்களை நேராகக் கண்டநுபவித்த அனேகம் ஸ்ரீவைஷ்ணவர்கள் ஸ்வாமியிடம் வேதாந்தவித்யாக்ரஹணத்தில் ஆஸ்தையினால் வந்து ப்ரார்த்திக்க, தம்மை வந்தாச்ரயித்த சிஷ்யவர்க்கங்களுக்குத் தமது தேஹச்ரமத்தைப் பாராமல் நிரந்தரமாக க்ரந்தகாலக்ஷேபம் ஸாதித்து வந்தார்.

ஸ்ரீ ஸ்வாமி சிஷ்யர்களுக்கு உபதேசிக்குங்காலங்களில் அவரவர்களுடைய ஜ்ஞாநாநுகுணமாக விஷயங்களை உபதேசிப்பதிலும் லோகாநுபவங்களையநுஸரித்து உபமானங்களைக் காட்டி சிஷ்யபுத்தியில் சாஸ்த்ரார்த்தங்களைத் தெளிவிப்பதிலும் அஸாதாரண ஸாமர்த்யம் வாய்ந்தவர். தமது உபதேசமஹிமையினால் தம்மையாச்ரயித்த சிஷ்யர்களெல்லோரையும் ஸ்வதர்மாநுஷ்டான ப்ரதானர்களாகச் செய்வதில் விசேஷ ஆஸ்தையையுடையவர்.

ஸ்ரீ ஸ்வாமியின் ஸித்தாந்தஸ்தாபநம்

இவ்விஷயத்தை ரௌத்ரி ௵ பங்குனி ௴ வேதாந்ததீபிகை வருமாறு கூறுகிறது—

'திருச்சிறுப்பள்ளி ஜில்லா முசிறி தாலூகா துறையூர்பக்கத்திலுள்ள அனேகம் கிராமங்களில் வஸிக்கும் வைஷ்ணவர்களான சில நான்காவதுவர்ணத்தார்களிடம் அவைதிகமதஸ்தர்கள் ஸமாச்ரயணம் ஊர்த்வபுண்ட்ரம் முதலான பஞ்சஸம்ஸ்காரங்களுக்கு யாதொரு ப்ரமாணமுமில்லை; ப்ரஹ்மஜ்ஞாநமுண்டானால் எல்லா ஜாதி மனிதர்களும் ப்ராஹ்மணனாகலாம் என்றிவ்வாறு வேறுவிதமான அனேக உபதேசங்களைச் செய்து அனேக ஸாதுஜனங்களை அவைஷ்ணவர்களாக்கிவருவதைப் பார்த்துவந்த மாருடி என்னும் க்ராமவாஸியான வைஷ்ணவ சிரோமணியான பாபுரெட்டியார் என்னும் ஓர் ஸாது ஸ்ரீ வைதிகவித்வத்ஸபையின் அத்யக்ஷரான புத்தன்கோட்டகம் ஸ்ரீ. உ.வ. ஸ்ரீநிவாஸாசாரியர் ஸ்வாமியிடம் அந்யர்களால் ஆக்ரமிக்கப்பட்டுவரும் வைஷ்ணவர்களைத் தெளிவித்து அவர்கள் மறுபடியும் வைஷ்ணவர்களின் ஆசாரத்தில் இருக்கும்படிச் செய்வதற்காக அவச்யம் வரவேண்டுமென்று நிர்பந்தித்துப் ப்ரார்த்திக்க, அந்த ஸ்வாமியும் அவர் ப்ரார்த்தனைக்கிணங்கி நளது ௵ மாசி ௴ 22௳ சிக்கத்தம்பூர் முதலிய பல பெரிய க்ராமங்களுக்குப்போய் அங்கிருந்த அவைதிகரை வாக்யார்த்தம் சொல்ல அழைத்தகாலத்திலவர் தாம் மௌநவ்ரதம் வஹித்திருப்பதாகவும் ஊர்த்வபுண்ட்ரதாரணம் முதலானதற்கு ப்ரமாணம் இல்லை என்று நான் சொல்லவில்லை என்றும், வைஷ்ணவர்கள் தாங்களாகவே வந்து தம்மையாச்ரயித்தார்களேயன்றித் தாம் அவர்களை அவைஷ்ணவர்களாக்கப் ப்ரயத்நம் செய்யவில்லை என்றும் தெரிவித்தார். பிறகு மௌநவ்ரதமடைந்திருப்பதாக பாவிக்கும் அவருடன் வாதிக்க வழியில்லாததினால் நம் ஸ்வாமி அவ்வூரில் ஏற்கனவே வைஷ்ணவாசாரத்திலிருந்து கலங்கினவர்களையும் மற்ற வைஷ்ணவர்களையும் இராமாநுஜகூடத்தில் ஸபைசேர்த்து பஞ்சஸம்ஸ்காரங்களினுடைய ப்ரமாணங்களையும் ஸ்ரீவைஷ்ணவ மந்த்ரத்தினுடைய ஸர்

வோத்க்ருஷ்டத்வத்தையும் பற்றித் தெளிவாக உபதேசித்து, ஸந்தேஹித்தவர்களைத் தெளிவித்து அவர்கள் முன்போல வைஷ்ணவாசாரத்திலேயே இருப்பதாக வரம் பெற்று வந்தவுடன், ஸமீப க்ராமவாஸிகளான வைஷ்ணவர்களுடைய ப்ரார்த்தனையின்பேரில் 4-5 க்ராமங்களுக்குப்போய் ஸ்ரீவைஷ்ணவமதத்தின் பெருமையைப்பற்றியும் ஆஸ்திக்யத்தைப் பற்றியும் அனேக உபந்யாஸங்களைச் செய்து வந்தார். ஸ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாயத்திலுண்டான விசேஷ ஊக்கத்தினால் 2-3தடவைகள் ஸ்ரீரங்கம் வந்தலைந்து காத்திருந்து ஸ்ரீ·பு·ஸ்ரீ. ஸ்வாமியை அழைத்துக்கொண்டு போய் அதிகமாக உபசரித்த மாருடி பாபு ரெட்டியாருடைய ப்ரயத்நத்தினால் ஸ்ரீ ஸ்வாமியின் உபந்யாஸமூலமாய் 4-5 ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்த ஸபைகளும் ஏற்படுத்தப்பட்டன

மேலப்பாளையம் ஸ்ரீநிவாஸாசாரியர்,

ஸ்ரீரங்கம் ரங்கஸ்வாமி பட்டர்,

ஸ்ரீவைதிகவித்வத்ஸபையின் கார்யதர்சிகள்.'

என்று.

ராஜமன்னார்குடியில் ஸ்ரீமான் ரங்கஸ்வாமி முதலியார் வித்வத்ஸபையில் நடந்த ப்ரச்ந ஸமாதானங்கள்

தக்ஷிணத்வாரகை என்று ப்ரஸித்தமான ராஜமன்னார்குடியில் ஸ்ரீராஜகோபாலனுடைய உத்ஸவகாலத்தில் நடைபெறும் ஸ்ரீமான் ரங்கஸ்வாமி முதலியாருடைய வித்வத்ஸதஸ்ஸில் ஸ்ரீ ஸ்வாமி நெடுங்காலம் ப்ரதானபரீக்ஷகராக எழுந்தருளியிருந்தார். துன்முகி வஞ பங்குனி மாதத்தில் நடந்த ஷை வித்வத்ஸதஸ்ஸில், உபயவேதாந்தங்களிலும் பூர்ணபாண்டித்யமுள்ளவரான திவான்பஹதூர், ஸ்ரீ. உப. வி கே. ராமாநுஜாசார்யஸ்வாமி எழுந்தருளியிருந்தார். அப்போது ஷை வித்வத்ஸதஸ்ஸில் ஸ்ரீ. உப. புத்தன்கோட்டகம் ஸ்வாமி, காரப்பங்காடு சிங்கப்பெருமாள்ஸ்வாமி, வெண்ணாற்றின்கரை மாதவாசார்யர் ஸ்வாமி, ஷை ஸ்ரீநிவாஸாசார்யர் ஸ்வாமி, தில்லையம்பூர், சக்ரவர்த்தியாசாரியர் ஸ்வாமி முதலான அநேகம் ப்ரஸித்தபண்டிதர்களும், மற்றும் அநேக வைதிகர்களும், தனவான்களும், உத்தியோகஸ்தர்களும் சேர்ந்திருந்தார்கள். அப்பொழுது ஸ்ரீ. உப. வி. கே. ராமாநுஜாசாரியர் ஸ்வாமி, பண்டிதர்களைப்பார்த்து, மஹாவித்வான்கள் நிறைந்திருக்கும் இந்த ஸபையில் சில ஸந்தேஹங்களைக் கேட்டுத் தெளிந்துகொள்ள ஆஸ்தைப் படுகிறேன். அதற்கு வித்வான்கள் அநுமதி கொடுக்கவேண்டும் என்று கேட்டார். அதைக் கேட்டு அந்த வித்வான்கள் அவச்யம் உங்கள் ஸந்தேஹங்களைக் கேளுங்கள்; எங்களுக்குத் தெரிந்தவரையில் பதில்சொல்லுகிறோமென்று சொன்னார்கள். பிறகு வி. கே. ஸ்வாமி, நான் கேட்கிற விஷயங்களுக்குப் பல பண்டிதர்கள் பதில் சொல்லாமல் யாராவது ஒரு பண்டிதர் பதில் சொல்லவேணும்; அவர் சொல்லுவதை மற்ற பண்டிதர்களும் அங்கீகரிக்கக்கூடியதாக இருக்கவேணும் என்று சொல்ல, அதைக் கேட்டு எல்லா வித்வான்களும், இந்த ஸபையில் ப்ரதான வித்வானாக இருக்கும் புத்தன் கோட்டகம் ஸ்வாமியே உங்களுடைய ப்ரச்நங்களுக்கு ப்ரத்யுத்தரம் சொல்லட்டும்; நாங்கள் எல்லோரும் அந்த ஸ்வாமி சொல்லுகிற விஷயங்களையெல்லாம் அங்கீகரிக்கிறோம், என்று ஒரே அபிப்ராயமாகச் சொன்னார்கள். பிறகு வி. கே ஸ்வாமி கேட்ட ப்ரச்நங்களாவன:— 1. பகவத்கீதை அத்-5ல், 'வித்யாவிநயஸம்பந்நே ப்ராஹ்மணே கவி ஹஸ்திநி। சுநி சைவ ச்வபாகே ச பண்டிதா: ஸமதர்சிந:' என்கிற ச்லோகத்தில், ப்ரஹ்மஜ்ஞானமுள்ள பண்டிதர்கள் ப்ரஹ்மவித்யை, ஆத்மகுணங்கள் இவைகளையுடைய ப்ராஹ்மணன், பசு, யானை, நாய், ச்வபாகன் இவர்களை ஸமானமாகப் பார்க்கவேண்டும் என்று சொல்லியிருப்பதால், இக்காலத்தில் உலகத்தில் மனிதர்களினால் வழங்கப்படுகிறவைகளான ஜன்மத்தினாலும், ஜ்ஞானத்தினாலும், குணங்களினாலும், ஆசாரங்களினாலும் உள்ள பேதங்களையெல்லாம் விட்டு ஸர்வப்ராணிகளையும் ஸமானமாகவே நினைக்கவேண்டும் என்று தோன்றுகிறது. இந்த விஷயம் ஸ்ரீபாகவதம், ஸ்கந்தம் 11, அத்—29-ல் 14 ச்லோ 'ப்ராஹ்மணே புல்கஸே ஸ்தேநே ப்ரஹ்மண்யே

கே ஸ்பு²லிங்க³கே | அக்ரூரே க்ரூரகே சைவ ஸமத்³ருக் பண்டி³தோ மத:' என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த இரண்டு ச்லோகங்களிலும் சொல்லப்பட்ட ஸாம்யபுத்திக்கு ஸங்கோசவிதாயகமான ப்ரமாணமில்லாமையினால் ஸர்வப்ரகாரஸாம்யம் விவக்ஷிதமென்பதை, அடுத்த 16-வது ச்லோகமான 'விஸ்ருஜ்ய ஸ்மயமாநாந் ஸ்வாந் த்³ருசம் வ்ரீடா³ஞ்ச தை³ஹிகீம் | ப்ரணமேத்³ த³ண்ட³வத்³ பூ⁴மாவாச்வசாண்டா³லகோ³க²ரம்' என்கிற ச்லோகத்தில், பந்துக்கள் பரிஹஸிப்பதையும், தன்னுடைய ஜாதி உயர்ந்தது என்கிற அஹங்காரத்தையும் விட்டு. நாய், தீண்டாதவர்கள், பசு, கழுதைகளையும் ஈச்வரனுடைய அம்சமாக நினைத்து நமஸ்கரிக்கவேணுமென்று விதித்து, மேல் 'அயம் ஹி ஸர்வகல்பாநாம் ஸத்⁴ரீசீநோ மதோ மம' என்று இப்படிச் செய்வது தான் உத்தமமான மோக்ஷோபாயம் என்று பகவானே உத்தவகீதையில் உத்தவருக்கு உபதேசித்திருப்பதால், ஸர்வப்ராணிகளையும் ஸமமாக நினைத்திருப்பவனைக்குறித்து கீதை, அத்–5 ல், 'சுநி சைவ ச்வபாகே ச பண்டி³தா: ஸமத³ர்சிந:' என்று ப்ராஹ்மணனையும் தீண்டாதானையும் ஸமமாக நினைத்து நமஸ்கரிப்பவனைக் குறித்து இவ்வுலகத்திலேயே முக்தனாக பகவானே உபதேசித்திருப்பதாலும், 'ஸர்வகர்மாண்யபி ஸதா³ குர்வாணோ மத்³வ்யபாச்ரய: | மத்ப்ரஸாதா³த³வாப்நோதி சாச்வதம் பத³மவ்யயம்' (கீதை, 18) என்கிற ச்லோகத்தில், சங்கர பாஷ்யத்திலும், ஆநந்தகிரி டீகையிலும், பாபங்களையே ஸர்வகாலங்களிலும் செய்துகொண்டிருந்தாலும் பகவானை ஆச்ரயித்திருப்பவன் மோக்ஷத்தை அடைவதாகச் சொல்லியிருப்பதாலும், கீதை, அத்–13, ச்லோ–1 ல், சங்கர பாஷ்யத்தில், 'ந ச சாஸ்த்ராநர்த²க்யம், அவித்³யாவத்³விஷயத்வாத் சாஸ்த்ரஸ்ய' என்றாரம்பித்து, 'தஸ்மாத³வித்³யாவத்³விஷயமேவ சாஸ்த்ரம் அவித்³யாவிஷயமிதி ஸித்³த⁴ம்' என்று எழுதியிருக்கிறபடியே, ப்ரஹ்மஜ்ஞானமில்லாதவன் தான் சாஸ்த்ரங்களில் சொல்லப்பட்ட வர்ணாச்ரம தர்மங்களை அநுஷ்டிக்க வேண்டும்; ப்ரஹ்ம ஜ்ஞானமுள்ளவன் கீழேசொல்லப்பட்டவிசேஷ விதிபலத்தினால் வர்ணாச்ரமதர்மங்களை விட்டு விடுவது குற்றமாகாது, என்கிற விஷயம் உத்ஸர்க்காபவாத ந்யாயத்தினால் ஸித்தமாகிறது. ஆகையினால், 'ஸர்வத⁴ர்மாந் பரித்யஜ்ய' என்று பகவத்ப்ரபந்நனைக்குறித்து ஸர்வவித தர்மங்களையும் விட்டுவிடச் சொன்னதாகச் சிலர் சொல்லுவதும் அனுசிதமாகாது' என்கிற விஷயத்தை ம்ருதுவான வார்த்தைகளினால், எல்லோரும் நன்றாகத் தெரிந்துகொள்ளும்படி வ்யக்தமாகச் சொல்லி முடித்தார்.

இப்படி ஸ்ரீ. வி. கே. ராமாநுஜாசார்யஸ்வாமியின் ப்ரச்னவாக்யங்களைக் கேட்ட ஸபையிலிருந்த வித்வான்கள் எல்லோரும் சேர்ந்து ஸ்ரீ புத்தனகோட்டகம் ஸ்வாமியையே ப்ரத்யுத்தரம் சொல்லும்படி ப்ரார்த்திக்க, ஸ்ரீ ஸ்வாமியும் வித்வான்களுடைய அபிப்பிராயப்படி ப்ரத்யுத்தரம் சொன்னார். அதாவது:—

பகவத்கீதை 5-வது அத்யாயத்திலிருக்கிற 'வித்³யாவிநயஸம்பந்நே' என்கிற ச்லோகத்திற்குப் 'பண்டிதர்கள்—வித்யை, விநயம் இவைகளோடுகூடின ப்ராஹ்மணனையும், பசுவையும், யானையையும், நாயையும், ச்வபாகன் என்கிற தீண்டாதாரையும் ஸமமாகப் பார்ப்பவர்கள்' என்று அர்த்தம் சொன்னது ப்ராஹ்மணன் முதலான ஐந்து வஸ்துக்களிடத்திலிருக்கிற ஸாம்யஹேதுவான ஓர் தர்மத்தை இன்னதென்று சொல்ல முடியாததனால் ஸரியானதல்ல. ப்ராஹ்மணன் முதலான ஐந்து வஸ்துக்களுக்கும் இங்கு சொல்லப்படுகிற ஸமதர்சனமானது ஏதாவது ஒரு விதத்தினால் மாத்திரமா? அல்லது ஸர்வவிதத்திலுமா? இவ்வைந்து வஸ்துக்களுக்கும் த்ரவ்யத்வம் முதலானவைகளினால் சொல்லப்படும் ஸாம்யமானது ப்ரக்ருதவிஷயத்திற்கு அநுபயுக்தமாகையினால் நிஷ்ப்ரயோஜனம். இவ்வைந்து வஸ்துக்களுக்கும் ஸர்வவிதத்தினாலும் ஸாம்யமானது அஸம்பாவிதம்.

இது நிற்க; இங்கு சொல்லப்பட்ட ப்ராஹ்மணன் முதலான ஐந்து வஸ்துக்களையும் ப்ரமாணங்களுக்குள் ப்ரபலமான ப்ரத்யக்ஷப்ரமாணம், பரஸ்பரம் ஸ்வரூபங்களினாலும், ஸ்வபாவங்களினாலும் அத்யந்தவிருத்தங்களாகக் காட்டுகிறபடியால் அதற்கு விருத்தமாக இவ்வைந்தும் ஸர்வவிதங்களினாலும் ஸமானங்களென்று ப்ரத்யக்ஷத்தைக் காட்டிலும் அத்யந்த துர்பலமான சப்தப்ரமாணத்தினால் சொல்ல முடியாவென்கிற விஷயம் பூர்வமீமாம்ஸையில், 'ஈஸஙிகூஜஷவாவா வ அயஉ஦ூ ஜிஹாவஸிதழ। தாஉ஦ூ ஙிவெ௱ண வஸிஹி திஸஙிவய஬ யதொஙவி வா' என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

இப்படி சாஸ்த்ரவிருத்தமான வர்த்தத்தை அங்கீகரித்தால் பசுவையும், நாயையும் ஸமமாகப் பார்க்கவேண்டியதால் பசுவின் பாலை தேவதைக்கு அபிஷேகம் செய்வது போல் நாயின் பாலையும் அபிஷேகம் செய்யவேண்டியதாகும். யானையையும் நாயையும் ஒரே விலைக்கு விற்கவேண்டியதாகும். மங்களவஸ்துக்களைப் பார்க்கிற விஷயத்தில் யானை முகத்தைப் பார்ப்பதுபோல் நாய்முகத்தைப் பார்ப்பதும் மங்களமாகும். அசுத்தஸ்தலத்தை சுத்திபண்ணும் கோமயத்தைப்போல் நாயின் விஷ்டையையும் சுத்திபண்ணுவதாக அங்கீகரிக்கவேண்டியதாகும். மங்களமான யானை முகத்தைப்போல மூதேவிக்கு இருப்பிடமான பசுவின் முகமும் மங்களமானதாகும். ஆகையால் விஷ்ராவிநயஸஂவனெ என்கிற கீதா வாக்கியத்திற்கு ப்ராஹ்மணன் முதலிய ஐந்து வஸ்துக்களையும் ஸமானமாகப் பார்க்கவேணுமென்று அர்த்தம் சொல்வது ஸர்வதா உசிதமாகாது. அந்த ச்லோகத்திற்கு ப்ரகரணத்திற்கு அநுகுணமான ப்ராமாணிகமான அர்த்தத்தை மேலே சொல்லுகிறோம்:— இதனால் ஬ூாஹ்மணெ வ௱ஜுவெ என்கிற ச்லோகத்தில் சொல்லப்படுகிற ஸாம்யத்ருஷ்டியும் ப்ராஹ்மணபுல்கஸாதிகளை ஸமமாகப் பார்ப்பதன்று. ஊாநொ஥ெஶ்ராவமிஷத்தில், 'ஶஊணீயஉரணா ஬ூாஹ்மணயொ நிஶாவஊ஦ூதெ। கவ஗ுபவாரணாஃ (ஷணாஉ) வ௱ஜுஸயொ நிஶாவஊ஦ூதெ' என்றும், பகவத்கீதையில் அத்- 9ல் 'கிஂ வ௱நவ஬ாஹணாஃ வ௱ணூாஃ' என்றும், ஈ௱ழீதெயில், 'வாவயொநிஂ ஸஶாவஜ்ஞா ஶூணாஉாஃ' என்றும், 'உஊதிரெவ விஷ்ஊஸ்ய உ஦ுதி஬ய஬உ஬ஸ்ய ஶாஶ்வதீ' என்றும், 'வணாஉவ௱ஜுஸாநாஂ வ (஬ூஹஸா) யொநிஷ்ஶுதி' என்றும் ஜன்மகாரணமான கர்மம் முதல் மரணம் வரையில் பரஸ்பரவிருத்தஸ்வரூபஸ்வபாவங்களான வஸ்துக்களை அத்யந்ததுல்யங்களாகப் பார்க்கும்படி சாஸ்த்ரம் சொல்லுகிறதாகச் சொல்லுவது, அநேக ப்ரமாணவிருத்தமாதலால் பண்டிதக்ருத்யமாகாது.

஬ூாஹ்மணெ வ௱ஜுவெ என்கிற ச்லோகத்தில் சொல்லப்படுகிற ஸமதர்சனமெதென்னில்; அதைத் தெரிவிக்கிறோம். பாகவதம் ஸ்க-11 அத்- 29ல் ஆரம்பத்தில், 'வ௱ஊஷராஶோஂ உநெ௱ யொஶவய஬ாஉநாதுநஃ। யயாஜஸா வ௱ஶாநு விபெ௱தூநெ஬ ஹுஷெ௱ஜஸாவூ௱த' என்று யோகாப்யாஸம் பண்ணுவது அத்யந்தம் கஷ்டப்பட்டுச் செய்யவேண்டுமாகையால், அதை விட்டுக் கஷ்டமில்லாமல் செய்யக்கூடிய மோக்ஷோபாயத்தை உபதேசிக்கவேண்டுமென்று கேட்ட உத்தவனுக்கு ஸ்ரீ க்ருஷ்ணபகவான் 'ஹஂத தெ கயயிஷ்஦ூாஸி ஊஉ யஶாநு வ௱ஶௌஉநு। யாநு ஶுஉயா஦஦வாநதெ஬ூா ஶூதூ௱ஜயதி உ௱ஜ஬யழ' என்கிறபடியே லகுவான உபாயத்தைச் சொல்வதாக ஆரம்பித்து, 'ஶஹாவெ஦வூஸஉயெ஬ாஙவி உதஉ஬வாஶோ ஹவ' என்று பகவத்கீதை அத்- 12ல் சொன்ன தேவாலய தர்மங்களை அநுஷ்டிக்கும்படி சொல்லி, அதை செய்யும் காலத்தில் இவ்வுலகத்தில் ஸர்வவஸ்துக்களிலும் காமம், கோபம், அஸூயை முதலிய தோஷங்கள் போவதற்காக பகவான் எல்லா வஸ்துக்களிலும் அந்தராத்மாவாகவஸிக்கிறான் என்கிற நிச்சயத்தோடு செய்ய வேண்

டும். எல்லா வஸ்துக்களிலும் பகவான் வஸிப்பதால் எல்லா வஸ்துக்களும் பகவானுடைய வாஸஸ்தானமென்பதில் ஸமான மென்கிற அர்த்தம் தான் 'ப்ராஹ்மணே ச்வபாகே ச' என்கிற ச்லோகத்தினால் சொல்லப்படுகிறது.

இந்த விஷயமானது இந்த ப்ரகரணத்தில் 'மாமேவ ஸர்வபூதேஷு பஹிரந்தரபாவ்ருதம் । ஈக்ஷேத' என்றும், 'இதி ஸர்வாணி பூதானி மத்பாவேன மஹாத்யுதே' என்றும், 'நரேஷ்வபீக்ஷ்ணம் மத்பாவம் பும்ஸோ பாவயத:' என்றும், 'ஆச்வசாண்டாலகோகரம் ப்ரணமேத்' என்றும், 'யாவத்ஸர்வேஷு பூதேஷு மத்பாவோ நோபஜாயதே । தாவதேவ முபாஸீத' என்றும், 'ஸர்வம் ப்ரஹ்மாத்மகம் தஸ்ய வித்யயாத்மமனீஷயா' என்றும், 'அயம் ஹி ஸர்வகல்பானாம் ஸத்ரீசீனோ மதோ மம । மத்பாவ: ஸர்வபூதேஷு' என்றும் சொல்லப்படுகிற முன்பின் வாக்கியங்களை கவனித்துப் பார்க்கிற பண்டிதர்களுக்கு நன்ருக விளங்கும்.

இங்கு மத்பாவ: என்கிற பதத்திற்கு மத்ஸ்தபாவ: — எல்லா வஸ்துக்களிலும் ஈச்வரன் வஸிப்பது என்று அர்த்தம். எல்லா வஸ்துக்களையும் ஈச்வரனாக நினைப்பது என்கிற அர்த்தமல்ல. உலகமும் ஈச்வரனும் வேறுபட்ட வஸ்துக்களாகையால் ஒன்ருகாது. 'விஸ்ருஜ்ய ஸ்மயமானான் ஸ்வான்' என்கிற ச்லோகத்திலும் நாய், சண்டாளன், கழுதைகளை நமஸ்கரிக்கும்படி சொல்வது ஸரியல்ல. மநுஸ்ம்ருதி முதலான தர்மசாஸ்த்ரங்களிலாவது மற்றும் இதிஹாஸபுராணங்களிலாவது ஓரிடத்திலும் சண்டாளன், நாய், கழுதைகளை நமஸ்கரிக்கும்படி விதிக்கவில்லை. ப்ரத்யுத, தர்மாநுஷ்டான காலத்தில் இவைகளைப் பார்த்தால் ப்ராயச்சித்தம் விதிக்கப்படுகிறது. 'ந ஸம்வாஸஶ்ச பதிதை: ந ம்லேச்சைர் ந ச்வபாகை:' என்று சில மனிதர்களோடு ஸஹவாஸம் கூடாதென்று நிஷேதிக்கப்படுகிறது. ஆகையால் கழுதை, நாய்களை பகவத்பக்தன் நமஸ்கரிக்க ப்ரஸக்தியே இல்லை. மனிதர்களுக்குள்ளும் கூட சில மனிதரை சிலர் நமஸ்கரிக்கலாம், சில மனிதர்களை நமஸ்கரிக்கக் கூடாது என்கிற நிர்பந்தம் அதிகமாக இருப்பதை சாஸ்த்ரங்களில் பார்க்கலாம். நமஸ்கரிப்பவனை 'ஆயுஷ்மான் பவ' என்று அநுக்ரஹிக்க யோக்யதையில்லாத கழுதை, நாய்களை நமஸ்கரிப்பதனுல் ப்ரயோஜனமுமில்லை. ஆகையால் பாகவதம் ஸ்க-3 அத்-29 ல் 'ஜீவா: ச்ரேஷ்டா ஹ்யஜீவானாம்' என்று ஆரம்பித்து ஸ்தாவரங்களையும், ஜங்கமங்களையும், திர்யக்குகளுக்குள் பலவிதமான உத்கர்ஷாபகர்ஷங்களையும் சொல்லி திர்யக்குகளைக் காட்டிலும் மனிதனையும், மனிதர்களுக்குள் ப்ராஹ்மணனையும், ப்ராஹ்மணர்களுக்குள்ளும் ஜ்ஞாநர், அநுஷ்டானம், வைராக்கியம், பக்தி இவைகள் உடையவர்களை மேன்மேலும் உயர்ந்தவனுகச் சொல்லி, பகவத்பக்தனை ப்ராஹ்மணனுக்கு மேல் உயர்ந்தவன் கிடையாதென்று சொல்லி, அப்படிப்பட்ட பக்தனைக் குறித்து 'மனஸைதானி பூதானி ப்ரணமேத் பஹுமானயன் । ஈச்வரோ ஜீவகலயா ப்ரவிஷ்டோ பகவானிதி' என்கிற வாக்யத்தினுல் இப்படி உயர்ந்ததாயும் தாழ்ந்ததாயுமுள்ள ஸர்வவஸ்துக்களிலும் பகவான் ஜீவாத்மாவோடு வஸிப்பதால் ஸர்வப்ராணிகளிடத்திலும் மனத்தினுல் கௌரவத்தைப் பண்ணிக்கொண்டு, எங்கும் வஸிக்கிற பகவானை நமஸ்கரிக்கவேண்டியது என்று சொல்லியிருப்பது போல 'விஸ்ருஜ்ய' என்கிற ச்லோகத்திலும் நாய், கழுதை, சண்டாளன் முதலிய தாழ்ந்த வஸ்துக்களிலும் வஸிக்கும் பகவானைக்குறித்துத் தான் நமஸ்காரம் விதிக்கப்படுகிறதென்பதை கீழே சொல்லப்பட்ட வாக்யங்களைக் கவனிக்கும் பண்டிதர்கள் அறிவார்கள். இதனுல் பக்தியின் பெருமை சொல்லப்படுகிறது.

'இஹைவ தைர்ஜித: ஸர்க:' என்கிற ச்லோகத்திற்கும் ப்ராஹ்மணனையும் ச்வபாகனையும், பசுவையும், நாயையும் ஸமமாக நினைக்கிறவன் இந்த உலகத்திலேயே ஸம்ஸாரத்தை

ஜயித்து முக்தனாகிறான் என்று அர்த்தம் சொல்வது ஸர்வதா அநுசிதம். ஸர்வவிதத்திலும் ஸமமில்லாத வஸ்துக்களை ஸமமாக நினைப்பவன், ஸம்ஸாரிகளுக்குள்ளும் ப்ராந்தனானவனேயல்லது முக்தனாகமாட்டான். ஆகையால் இப்படி விபரீதார்த்தத்தைக் கல்பித்து அதைக்கொண்டு ஸர்வதர்மங்களையும் விட்டுத் திரிய ஆசைப்படுவது ஸித்திக்கமாட்டாது.

‚ஸவ-ஹ்யஉ-ாநு’ என்கிறச்லோகத்தின் சங்கரபாஷ்யத்தில் ‚தஷாகஃ ஹ்ராஷிவூத்ய நிஜித் வைவாயஂ ஸஂஸாரஹ்ஃ, ந தஂ வாஉாயஃ’ என்று சொல்லியிருக்கிறபடியே ஜகத்தை மித்யையாகச் சொல்லுகிறவர்கள் மதத்தில் ஜீவாத்மாக்களும், நரகாநுபவங்களும் மித்யாநுபூதங்களாகையாலே அவர்கள் சாஸ்த்ரங்களையும் ஸர்வதர்மங்களையும் விட்டுவிடலாம். ஸம்ஸாரஸத்யத்வவாதி விசிஷ்டாத்வைதமதத்தில் ஜீவாத்மாக்களும் புண்யபாபகர்மங்களான ஸுகதுக்கங்களும் ஸத்யங்களாகையினாலே சரீரமிருக்கும் வரையில் சாஸ்த்ரவச்யதையை அங்கீகரித்திருப்பதால் தர்மங்களை விட ப்ரஸக்தியே இல்லை.

ஆகையால் ஸம்ஸாரம் பொய் என்று சொல்லுகிறவர்களுடைய வாக்யங்களை ஸம்ஸாரம் ஸத்யமென்றுசொல்லுகிற நாம் அங்கீகரிப்பது உசிதமாகாது.

ஸ்ரீ சங்கராசாரியர் ஸ்ரீ க்ருஷ்ணாவதாரம் முதலிய பகவதவதாரங்களையும் பொய் என்று சொல்லுகிறபடியால் பொய்யான க்ருஷ்ணனால் சொல்லப்பட்ட கீதையும் அதன்பொருளான அத்வைத வேதாந்தமும் பொய்யாக முடியும். ஆகையால் உலகம் ஸத்யமென்கிறவர்கள் அத்வைதமதத்தை ஆதரிக்க ந்யாயமில்லை.

மனிதன் ஸ்வதர்மங்களை விடக்கூடாது

கீதை அத் 18 ஆரம்பத்தில் சிலர் தர்மங்களை விடலாம் என்றும், சில தர்மங்களை விடக்கூடாதென்றும் சொல்லுகிறார்கள். அந்த விஷயத்தில் தம் அபிப்ராயத்தைச் சொல்வதாக ஆரம்பித்த பகவான் கர்மங்களும் அதன் பலன்களும் என்னுடையதல்ல, அவைகளை நான் ஸ்வதந்த்ரனாகச் செய்யவில்லை என்கிற எண்ணத்தோடு கர்மங்களை அநுஷ்டிப்பதே உத்தமமாக நிச்சயிக்கப்பட்ட என்னுடைய அபிப்ராயம் என்று சொல்லுகிறபடியினால் இதற்கநுகுணமாக கீதையில் இருக்கும் ‚நாயஂ லொகொஸ்த்யயஜ்ஞஸ்ய குதொ஽ந்யஃ குருஸத்தம’ என்கிற வாக்யத்திற்கு நித்யகர்மங்களை விட்ட மனிதனுக்கு ஸ்வர்க்கமுமில்லை மோக்ஷமுமில்லை என்று ஸ்ரீபாஷ்யகாரர் வ்யாக்யானம் செய்திருப்பதாலும், அத்-3-17ல் மோக்ஷம் போனபிறகுதான் வர்ணாச்ரமதர்மத்தை விடலாம் என்று அவரே சொல்லியிருப்பதாலும் ஸம்ஸார மண்டலத்திலிருப்பவன் ஸ்வதர்மத்தை விடக்கூடாது, ஸ்வதர்மங்களை விடுவது தமோகுண கார்யம் என்று அத்-18ல் நியதஸ்ய து ஸந்ந்யாஸஃ என்கிற வாக்யத்தினால் தூஷிக்கப்பட்டிருப்பதால் அது பாபமேயாகும். ஆகையினால் ஒருபடியாலும் ஸ்வதர்மங்களை விட ப்ரஸக்தியேயில்லை என்கிற விஷயத்தை ஸர்வரும் நன்கு உணரும்படியாக அமைதியுடன் பதில்சொன்னார். ப்ரமாணாநுஸாரியான ஸ்ரீஸ்வாமியினுடைய ப்ரத்யுத்தர வாக்யங்களைக் கேட்டு வந்திருந்த ஸகல வித்வான்களும் ஸந்தோஷித்து ஸ்ரீஸ்வாமியினுடைய பாண்டித்யத்தைப் புகழ்ந்துபேசினார்கள்.

ஸ்ரீமான் வி. கே. ராமாநுஜாசார்ய ஸ்வாமியும் ஸ்ரீஸ்வாமியினுடைய ப்ரத்யுத்தரங்கள் எல்லாம் ப்ரமாணங்களை அநுஸரித்தும் தமது திருவுள்ளத்திற்கும் உகப்பாக இருந்ததால் அவைகளைக் கேட்டு ஸ்ரீஸ்வாமியின் ஜ்ஞானத்தின் மஹிமையையும் பொறுமையையும் பற்றி மிகவும் ச்லாகித்து கொண்டாடி ஸந்தோஷித்தார்.

ஸ்ரீஸ்வாமியின் ஜீவனோபாயம்

பாரதம் ஆநுசாஸநிகபர்வத்தில் ‚கஃ ஸ்வித்ரா ஹ்மணவெஸ்ஷ யஷி நிவெயொ உஹாநு । ப்ரியா ஹ்ரீக்ஷ்ணஂ ஸஂவாவெஸா ஃவஹ்யெகு

ஸம்ஹரோஹயெக ॥ ப்ராஹ்மணேஷு ப்ரு9ஙெஷு யசெ9ாzவி ஹணெஸக யு9வழ। யஸ9ஹணாஸெ ஹதாநாஸோவஸ்ரா ஸம்ஶயஃ' என்று சொல்லுகிறபடியே ப்ராஹ்மணன் அதிகமான அர்த்தத்தை ஸம்பாதிப்பது லோகநாசஹேதுவாகையாலும், பாகவதத்தில் 'ஷேயம ஹிம்ஸாzந்ரதம் ஊஹஃ காஃ கெ்ராயஸ்யொ தஃ। ஸெஷொ ஸெவாவிஶா ஸஃ ஸம்ஸ்யா வ்யஸநாநி வ॥ வணதெ வஷுஶாநய9ா ஹ்யசெ9ா தா நரு- ணாழ। தஸாஊநயய9ாவ்ய௦ ஸ்ரெயொz யீஊரதஸ்ரெஜெக' என்று ஆத்மக்ஷேமத்தை யபேக்ஷிக்கிற மனுஷ்யனுக்கு அதிகமான அர்த்தார்ஜனத்தை அனர்த்த ஹேதுவாகச் சொல்லுகிறபடியினாலும் குடும்பஜீவனத்துக்கு அபேக்ஷிதமான அம்சத்தைக்காட்டிலு மதிகமான அர்த்தத்தை ஸம்பாதனத்தில் பீதராய் 'ஸீதாரு தாஹ்ரா௦ ஜீவெத' என்று மனுவினால் ப்ராஹ்மணவிஷயத்தில் முக்கியமான ஜீவனோபாயமாக விதிக்கப்பட்டதாய், 'கரு தம் ஸ்ராஊயாவிதம்' என்று அம்ருததுல்யமாகச்சொல்லப் பட்டதாய், 'ஊருயதாமதா ஸெவ்ராஃ ஶுஹ ஸெஷ்வி-ஷய॥ஸஊா' என்கிறபடியே க்ரஹஸ்தாச்ரமத்திலிருக்கிறவர்கள் ப்ரயத்னம்பண்ணாமல் தானாக வந்த விஷயங்களை அநுபவிக்கலாமாகையினாலும், 'ஸெவா ஶுவ்ருதிராவ்ரா தா தவாத்தாம் வஸிவஜயெக' 'ம ஶுவ்ருத்ரா கஊாவம்' என்று மனுவினால் ப்ராஹ்மணவிஷயத்தில் நிஷேதிக்கப்பட்டதான ஸேவகவ்ருத்தி ஸ்வயமாக வந்தாலும் அதுவும், மற்றும் அதைப்போல ஶாஸ்த்ரநிஷித்தங்களான ஜீவனோபாயங்களும் பாபமான நிஷித்த கார்யங்களாகையினாலே அவைகளில் ப்ரவர்த்திக்க இஷ்டமில்லாதவராய் ஸாத்விகர்களான தார்மிக சிஷ்யர்களால் ஸ்வயமாகவே கொண்டுவந்து கொடுக்கப் பட்டதான ஸத் த்ரவ்யங்களாலும் அதிலுமுயர்ந்ததான பிதாமஹ பித்ருக்ரமாகதமான தமது குலதனத்தினாலும் அத்யந்தஸந்துஷ்டராய் தமது தேஹயாத்ரையை நடத்தி வந்தார்.

ஸ்ரீஸ்வாமியின் உபந்யாஸ ஸம்மானபத்திரங்கள்

அத்யந்த துரூஹங்களான ஶாஸ்த்ரார்த்தங்களையும் கூட அறிவிலிகளும் அறிந்துகொள்ளும்படி எளிய தமிழ்நடையில் உபதேசிக்கிற ஸாமர்த்யமானது ஸ்வாமி ஒருவருக்கே அஸாதாரணமாக உள்ளது. இதை நன்கறிந்த ஸ்ரீவைஷ்ணவஸித்தாந்த ஸபையார் ஸ்ரீஸ்வாமியை தென்னிந்தியாமுழுவதும் ஸ்ரீவைஷ்ணவ மதம் எங்கும் பரவும்படி ஷை மதத்தின் தத்வம் ஹிதம் புருஷார்த்தம் முதலானவைகளை அங்கு அங்கு போய் உபந்யஸித்தருளவேணுமென்று ப்ரார்த்திக்க, ஸ்ரீஸ்வாமியும் அதற்கிணங்கி ஆழ்வார்திருநகரி முதல் நவதிருப்பதிகளிலும் மற்றும் மதுரை முதலிய தமிழ்நாடுகள் முழுவதிலும் ஸஞ்சரித்து வைஷ்ணவஸித்தாந்தத்தைப் பற்றிய பற்பல ஸாரதமமான விஷயங்களை உபந்யஸித்தருளினார். அப்போது தென் திருப்பேரையில் ஸ்வாமியின் உபந்யாஸங்களைக்கேட்டு மிகவும் ஸந்தோஷித்த ஸ்ரீ அனந்தக்ருஷ்ண அய்யங்காரென்கிற தமிழ் வித்வான் ஸ்வாமியின் ஜ்ஞாநமஹிமையைக் குறித்து பல பாசுரங்களைப்பாடிக் கொண்டாடினார். அதில் முதல் பாசுரம் காளயுக்தி வரு வேதாந்ததீபிகையில் ப்ரசுரிக்கப்பட்டிருக்கிறதை இப்போதும் பார்க்கலாம்.

பிருதங்கள்

இப்படி ஸ்ரீஸ்வாமி அனேகம் திவ்யதேசங்கள் நகரங்களுக்குச் சென்று ஸகல ஜனங்களுக்கும் தமது தர்மோபதேசமஹிமையினால் ஆஸ்திக்யத்தை உண்டுபண்ணுகிற விஷயத்தை பாரதகர்மமஹீமண்டலஸபா கார்யதர்சி மூலமாகக்கேட்டு ஸந்தோஷித்த ஷை ஸபாத்யக்ஷரான தர்பங்கா மஹாராஜா ஸ்ரீஸ்வாமிக்கு 'மஹோபதேசகர்' என்கிற பிருதாலங்க்ருதமான ஸம்மான பத்ரிகையை ஷை ஸபா கார்யதர்சிமூலமாகக் கொடுத்தனுப்பினார்.

கோயம்புத்தூரில் ஸ்ரீவைஷ்ணவ ப்ரபுவாக இருந்த ஸ்ரீமான் ஸி. வி. வெங்கட்ரமண அய்

யங்கார் ஸ்ரீஸ்வாமியின் உபந்யாஸ மஹிமையைக்கேட்டு அதிகப்ரீதராய் கோயம்புத்தூர் ஸ்ரீவைஷ்ணவஸித்தாந்த ஸபையின் மூலமாக ஸ்ரீஸ்வாமியை பல தடவை கோயம்புத்தூருக்கு அழைத்துப்போய் அந்த நகரவாஸிகளான பெரிய உத்யோகஸ்தர்களுடன் அனேக காலங்கள் உபந்யாஸங்களைப் பண்ணச்சொல்லி கேட்டனுபவித்து அவ்வூர் ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்தஸபையில் அனேக வித்வான்களுடைய ஸந்தோஷபரீவாஹமாக ஸ்ரீஸ்வாமிக்கு 'வேதாந்தகல்பதரு' என்கிற ஸம்மானபத்ரிகை அளித்திருக்கிறார்.

காஞ்சீபுரம் ஸ்ரீவைஷ்ணவ ஸபையில் ராமாநுஜதயாபாத்ரோத்ஸவத்தில் காஞ்சீ ஸ்ரீவைஷ்ணவஸித்தாந்த ஸபையில் அதனத்யக்ஷரான ஸ்ரீமான் வி. வி. முதலான மஹான்களாலும் ஸ்ரீஸ்வாமியினுடைய உபந்யாஸ ரஸாஸ்வாத த்ருப்தர்களான பண்டிதர்களாலும் தேசிகதர்சனவிஜயத்வஜர்' என்கிற பிருதமளிக்கப்பட்டது.

ஸ்ரீஸ்வாமி விஷயத்தில் ஸர்வேச்வரன் செய்தருளின உபகாரங்கள்

இப்படி இந்த ஸ்வாமி ஜ்ஞாநாநுஷ்டான வைராக்யநிதியாய் 'ஸததக்ஷ்தஜெ............ ஞுஜியெயரா:' என்கிறபடியே யதீச்வரஸரஸ்வதீரஸாஸ்வாதத்ருப்தராய் வேதாந்தவிஜ்ஞானோபதேசநிரதராய் எழுந்தருளியிருந்த ஸமயத்தில் 'வரீக்ஷாஞு ஜமஹாயஃ கரொதெ ஷூஜஸெதவாழ' என்கிறபடியே இவரைப் பரீக்ஷிக்க ப்ரவர்த்தித்த ஸர்வேச்வரன் இவருடைய ஸகலதர்மாநுஷ்டானங்களுக்கும் நிதானமாக இருந்த பத்நியினுடைய வியோகத்தை 34-வது திருநக்ஷத்ரத்தில் செய்துவைத்தான். ஸ்ரீஸ்வாமியும் தமக்கு பால்யவயதிலேயே ஸம்பவித்த பத்நீவியோகத்தினால் ஔபாஸந, வைச்வதேவ பஞ்சமஹாயஜ்ஞாதிகர்மங்களுக்கு லோபம் ஸம்பவித்ததைக்குறித்து கொஞ்சம் துக்கிதராயிருந்தாலும் 'வஸிஹ்ரஹொரzதி ஊடீவாய' என்றும் 'யாவதஃ கரரெத ஜஹரஃ' என்றும் சொல்லுகிறபடியே ஸர்வேச்வரன் நமக்குப் பரிக்ரஹத்தைக்குறைக்கவேணுமென்று நினைத்து 'யஸ்யாநுக்ரஹஜிஹ்ரிஷி' 'வொரஙுமெவஸு வியொமெந' என்கிறபடியே அநுக்ரஹித்தப்ரகாரமிது என்று தீர்மானித்து புனர்விவாஹம் செய்துகொள்ளும்படி பிதா முதலானவர்கள் நிர்ப்பந்தித்ததற்கும் அதனாலுண்டாகக்கூடிய ச்ரமங்களை அவர்களுக்குத்தெரிவித்து ஸமாதானம் பண்ணிவிட்டு விஷயாநுபவவிரக்தராகவே எழுந்தருளியிருந்தார்.

பிறகு ஸர்வேச்வரன் மறுபடியும் இவரை பரீக்ஷிக்க நினைத்து ஸம்ஸாரிகளுக்கு ஸம்பாவிதங்களான துக்கங்களுக்குள் ப்ரதானதமமாய் அத்யந்ததுஸ்ஸஹதுக்கமென்று ஸ்ரீபாஷ்யகாரரால் அருளிச்செய்யப்பட்ட குணவத்புத்ர வியோகத்தையும் உண்டாக்கினான். அதாவது 18-வது வயதிலேயே பண்டிதோத்தமனாய் கொண்டாடப்பட்டு குணாதிகனுமிருந்த ஜ்யேஷ்டபுத்ரனுக்கு விவாஹோத்தரகாலத்திலேயே விநாசத்தை உண்டுபண்ணினான்.

ஸ்ரீசுகவிநாசகாலத்தில் பகவதவதாரமான வ்யாஸாதிகளும்கூட 'வெவாயிநொ விரஹகாதர ஞுஜரஹாவ' என்கிறபடியே வருந்தின மஹத்தரசோகத்தை ஸ்வாமி விவேகாதிசயத்தினால் ஸஹித்து யதாபூர்வம் வேதாந்தப்ரவசனம் பண்ணிக்கொண்டு இருந்தார்.

மறுபடியும் இவரைப் பரீக்ஷிக்க நினைத்த ஸர்வேச்வரன் மூத்த குமாரனைப் போலவே இருந்த மற்றொரு குமாரனையும் அப்படியே 18-வது வயதில் விவாஹோத்தரகாலத்தில் நசிக்கும்படி செய்தும் அதிலும் த்ருப்தி இல்லாமல் மூன்று குமாரத்திகளையும்கூட அதிபால்ய வயதிலேயே விதவைகளாக ஆகும்படி அவர்களுக்கு பர்த்ருவியோகத்தைப் பண்ணிவைத்ததோடு மற்றும் பலவிதமான ச்ரமங்களையும் பண்ணிவைத்தான்.

இப்படி இவ்வுலகத்தில் மற்றொருவரிடத்திலும் காணப்படாமலும் கேட்கப்படாமலுமிருக்கிற மஹத்தர துக்க பரம்பரைகளை அடைந்த ஸ்ரீ ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமியோ வென்றால்

'பாத்ரஹாயப்ராத்யபாஸ்ய நாஸஹஜீவாத்ய ஸஹஜை:' என்றும் 'மாதாபித்ருஸஹஸ்ராணி பாத்ராஸகதானிச | ஸம்ஸாரேஷ்வநுபூதானி கஸ்ய தே கஸ்ய வா வயம்' என்கிற ஶாஸ்த்ரார்த்தத்தில் நிலைபெற்ற நெஞ்சுடையராய் 'ஸ்வஶேஷவிதிவ் அஸ்வாஶேஷித்வேஶேஷஶாயிநே' என்று ஸ்ரீபாஷ்யகாரர் அருளிச்செய்திருக்கிறபடியே ஆத்மாக்களுக்கு பரஸ்பரம் ஸம்பந்தமில்லை என்கிற விஷயத்தில் தெளிவுடையராயிருக்கையாலும், தனது பூர்வகர்மாநுகுணமாக ஸர்வேச்வரன் பலப்ரதானம் பண்ணுகிறான் என்கிற ஶாஸ்த்ரார்த்தத்தில் ஸம்பூர்ணமான விச்வாஸத்தினாலும் அந்த துக்க காலங்களிலும் 'களைவாய் துன்பம் களையா தொழிவாய் களைகண் மற்றிலேன்' என்றும், 'தருதுயரம் தடாயேல், கண்டாரிகழ்வனவே' என்றும் அருளிச்செய்தபடியே தன்னை இப்படி ஹிம்ஸிக்கிற ஸர்வேச்வரனிடத்திலும் பக்திகுறையாதவராய் சிந்தையாலும், சொல்லினாலும், செய்கையாலும் அவனுக்கே வழுவிலா வடிமைகளை வருத்தமில்லாதவராய் முன்போலவே செய்து உகந்துவந்தார்.

இப்படி இந்த ஸ்வாமி பால்யாவஸ்தை தொடங்கி அதிகமாக வயஸ் ஆன தசையிலும் – மறந்திகழும் – அறந்திகழும் மனத்தவர் என்று ஸர்வ மஹான்களாலும் கொண்டாடக்கூடிய குணாதிசயங்களை யுடையவராய் தென்னாடும் வடநாடும் தொழநின்ற திருவரங்கத் திருப்பதிக்குத்திலகபூதராய் பொங்கேழ்புகழ்கள் – வாயவனை என்றும் சொல்லுகிறபடியே அபிகமனாதி பஞ்சகாலங்களிலும் பகவத்கைங்கர்யநிரதராய் 'குஶலீராகா.........குதீர்யயா:' என்கிறபடியே தம்மை ஆச்ரயித்த ஸச்சிஷ்யர்களுக்கு உபயவேதாந்த ப்ரவசனாதி ஸாத்விகபகவத்குணாதிக்யாஸானுபவத்தினால் இச்சுவை என்கிறபடியே நித்யத்ருப்தராய் முக்ததுல்யராயெழுந்தருளியிருந்தார்.

இவர் அருளிச்செய்த க்ரந்தங்கள்

1. ந்யாஸநிர்ணயம்
2. ப்ரமாணநிஷ்கர்ஷம்
3. உத்திஷ்டாபரஜோத்யோத பூமிகா
4. ஜிதந்தாஸ்தோத்ரவ்யாக்யானம்
5. ஆராதனக்ரமம்
6. ஸ்த்ரீதர்மம்
7. ஸச்சூத்ரதர்மம்
8. ஈட்டின் விமர்சம்
9. பரிகாரவிஜய வ்யாக்யானம்
10. ப்ராணமப்ரகாசம்

இன்னும் பல உண்டு.

199555

கலிஶகே ஜயாப்தே ஶ்ராவணமாஸே ஶுக்லே க்ருஷ்ணபக்ஷே
பத்மபதோர்ஹநந்தநாமஸ்ய ஶ்ராவணே ஸமாரம்ப்ய தார்க்ஷ்யேநிஶ |
வாஸரே ஶ்ரீநிவாஸோ முனிவரஶ்ருஸ்ரீவத்ஸவாஸரேஶ
ஸ்ஸ்ரீக்ருஷ்ணஸ்ய பத்மஸமந்ததிஸ்மரணாவீக்ஷிதோ விஷ்ணுஸ்ய ||

பத்மஜோத்கூர்ம ஹாரே பரிசகஜநந: வ்ரதவாஸரே
நாநாதந்த்ரேஷ்வபி நிபுணதமதி: ஸ்ரீநிவாஸாயதேவ: |
ஶாந்த: ஶ்ரீரங்கவாஸீ ஶ்ருதிஶிகரகுரோ: பாதபத்மம் ஸ்வயமவாப
ஸ்ஸ்ரீக்ருஷ்ணஸ்ய ரேணோ: பரகரணயா ஶ்ரீவபதயார் ஹேஜே ||

ஜயாப்தே ஶ்ராவணே க்ருஷ்ணபக்ஷே நவம்யாம் வியோகதே |
வாஸரே ஶ்ரீநிவாஸார்ய: ஸ்வகுரோ: பதாஶ்ரயஶ ||

ஸ்ரீ:

43-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரின் ஸஞ்சாரக்ரமம்

(சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி)



திருக்குடந்தையில் ஸ்ரீ அழகியசிங்கரின் பட்டண ப்ரவேசம்

25-1-55ல் கும்பகோணத்தில் ஸ்ரீராகவாசாரியர் க்ருஹத்தில் வக்கீல் சங்கத்தாரும் வக்கீல்குமாஸ்தா சங்கத்தாரும் ப்ரார்த்தித்ததன் பேரில் ஸ்ரீ அஹோபிலமடத்திற்கெழுந்தருளியாயிற்று. 26-1-55ல் வக்கீல் சங்கத்தாரும் வக்கீல் குமாஸ்தாக்கள் சங்கத்தாரும் விசேஷ உத்ஸாஹத்துடன் ஆராதித்தார்கள். சங்கத்தார்களுக்கு ஸ்ரீ அழகிய சிங்கர் ஏதேனும்ஸாதிக்கவேணுமென்றும் ப்ரார்த்தித்தார்கள். ஸ்ரீ அழகிய சிங்கரும் திருவுள்ளம்பற்றி சில வார்த்தைகள் அருளிச்செய்தாயிற்று. அதன் ஸாரமாவது துராசாரத்தின் பேரில் தாம் வ்யாஜ்யம் தொடர்ந்திருப்பதாகவும், அதாவது இந்தியாவை விட்டு முக்யமாக ப்ராஹ்மணஸமுதாயத்தைவிட்டு துராசாரம்ஒழிய வேண்டும் என்றும் தாவா செய்திருப்பதாகவும், அந்த தாவாவில் இந்நகரிலுள்ள வக்கீல்களும், வக்கீல் குமாஸ்தாக்களும் ஒன்று சேர்ந்து தம் கக்ஷிக்கே வக்காலத்து வாங்கிக் கொள்ளவேணுமென்றும், எதிர் கக்ஷிக்கு ஆஜர் ஆகாதிருக்கவேணுமென்றும், அப்படிச் செய்வீர்களென்றும், இரு சங்கங்களும் ஒன்று சேர்ந்து விட்டபடியால் இனி கொஞ்சமும் காலவிளம்பமில்லாமல் தம் கக்ஷி ஜெயித்து விடுமென்றும், ஸாதிக்கும்படியாயிருந்தது. எல்லோரும் அதனுட்கருத்தையுணர்ந்து உகந்தார்கள். திருக்குடந்தைக்கெழுந்தருளியிருந்த திவிருந்தே உப்பிலியப்பன் ஸன்னிதி கோயில் துறையாரும் ஊர்வாஸிகளும், இங்கிருந்து ஸஞ்சாரமாயெழுந்தருளும்போது உப்பிலியப்

பன் ஸன்னிதிக்குத்தான் முதலில் எழுந்தருள வேணுமென்றுப்ரார்த்தித்து இருந்தார்கள். அன்றுமவர்கள் வந்து ஸ்ரீ அழகியசிங்கர் உப்பிலியப்பனை நிச்சங்கமாக மங்களா சாஸனம் பண்ணும்படியான ஏற்பாடு ஆகியிருப்பதாகவும் ப்ரார்த்தித்தார்கள். அன்று ராத்ரி திருக்குடந்தையிலிருந்து 5 மைலுள்ள உப்பிலியப்பன் ஸன்னிதிக்கெழுந்தருளினர். காலம் சென்ற ஜவுளி ஸ்ரீ நாராயணய்யங்கார் குமாரர் ஸ்ரீ உப்பிலி அய்யங்காரும் அவ்வூர் வாசிகளும் திருநாகேச்வரம் வடக்கு வீதியிலிருந்து பூர்ணகும்பம் வேதகோஷம் வாத்யவாணவேடிக்கைகளுடன் எதிர்கொண்டு எழுந்தருளப் பண்ணிக்கொண்டுபோய் ஷை உப்பிலி அய்யங்கார் கிருஹத்தில் எழுந்தருளப் பண்ணினர்கள். ஸ்ரீ உப்பிலி அய்யங்கார் 28–1–55ல் எல்லா பெருமாள்களுக்கும் திருமஞ்சனம் பண்ணி ராத்ரி டோலோத்ஸவத்தையும் நடத்தி வைத்து ஆராதித்தார்.

அன்றையதினம் ஸகல மரியாதைகளுடன் ஸ்ரீ அழகிய சிங்கர் உப்பிலியப்பனை மங்களா சாஸனம் செய்தருளினர். மறுநாளும் ஊராரின் ப்ரார்த்தனையின் பேரில் அவ்வூரிலேயே எழுந்தருளியிருந்தார். அன்று ராத்ரியும் உப்பிலியப்பனை மங்களாசாஸனம் பண்ணி நித்யாநுஸந்தான சாற்றுமுறைக் கெழுந்தருளியிருந்து, ஸ்ரீபாரி முகல்ய மரியாதைகளைப் பெற்று ஆச்ரமத்திற்கெழுந்தருளினர். அன்று ராத்ரி அங்கிருந்து 15 மைலுள்ள தேரழுந்தூருக்கெழுந்தருளினர். வழியில் தேவனர் விளாகத்தில் ஸ்ரீ வீரராகவாசாரியரின் ப்ரார்த்தனையின் பேரில் வழி மண்டபப்படியாக எழுந்தருளியாயிற்று. பெருமாள் ஸம்பாவனையான பிறகு சர்க்கரை, பழம் வினியோகங்கள் நடந்தன. அங்கிருந்து தேரழுந்தூரெழுந்தருளியாயிற்று. அவ்வூர் வாசிகள் ஸ்ரீ அஹோபில மடத்திலெழுந்தருளப்பண்ணி பக்தி ச்ரத்தையுடன் 30–1–55 முதல் 1–2–55 வரையில்



ஸ்ரீ அழகியசிங்கரின் தேரழுந்தூர் விஜயம்

ஆராதித்தார்கள். டோலையும் திருமஞ்சனமும் நடத்தி வைத்தார்கள். கோயில் துறையாரும் அவ்வூர் வாஸிகளும் ஸ்ரீ அழகிய சிங்கர் ஆமருவியப்பனை திருவுள்ளப்படி நிச்சங்கமாக மங்களா சாஸனம் பண்ணும்படி ஏற்பாடாகியிருப்பதாக விண்ணப்பித்து கோயிலுக்கெழுந்தருளவேணுமென ப்ரார்திக்க, ஸ்ரீ அழகிய சிங்கரும் ஆமருவியப்பனை ஸகல மரியாதைகளுடனும் மங்களாசாஸனம் பண்ணி பெருமாளுக்கு சால்வை ஸமர்ப்பித்தாயிற்று.

1–2–55 ராத்ரி அங்கிருந்து புறப்பட்டு 8 மைலுள்ள காளிக்கெழுந்தருளினர். 2–2–55ல் அவ்வூர் வாசிகள் ஆராதித்தார்கள். 3, 4 தேதிகளில் ஸ்ரீ வீரராகவாசாரியர் ஆராதித்தார். டோலையும் நடத்தி வைத்தார். 4-2-55 ராத்ரி புறப்பட்டு 8 மைலுள்ள திருவழுந்தூரெழுந்தருளியாயிற்று. ஸ்ரீ தேசிகன் ஸன்னதியில் எழுந்தருளியிருந்தார். அவ்வூர் வாஸிகளும் ஸ்ரீ R. S. ராஜகோபாலய்யங்காரும் 5, 6 தேதிகளில் ஆராதித்தார்கள். ஸ்ரீ தேசிகனை மங்

களா சாஸனம் பண்ணிக்கொண்டு 6–2–55 ராத்ரி அங்கிருந்து புறப்பட்டு 6 மைலுள்ள கோட்டூருக்கெழுந்தருளினர். 7–2–55 மத்தியான்னம் புறப்பட்டு தியாகராஜபுரம் எழுந்தருளி 31-ம் பட்டம் ஸ்ரீ அழகிய சிங்கர் பிருந்தாவனத்தை மங்களா சாஸனம் செய்து விட்டு திரும்பி சாயங்காலமே கோட்டூருக்கு எழுந்தருளினர். அன்று ஆராதித்தார்கள். 7–2–55 ராத்ரி புறப்பட்டு அங்கிருந்து 8 மைலுள்ள திரிபுவனத்திற்கெழுந்தருளினர். 8–2–55ல் பாஷ்யம் அய்யங்கார் ஆராதித்தார். ஸ்ரீ கண்ணன் ஐயங்கார் டோலோத்ஸவம் பண்ணிவைத்தார். அங்கிருந்து 8–2–55 ராத்ரி புறப்பட்டு 5 மைலிலுள்ள பௌண்டரீகபுரமெழுந்தருளினர். 9-2-55ல் அவ்வூரில் ஸி ஆர். வீரராகவாசாரியர் எல்லாப்பெருமாளுக்கும் திருமஞ்சனம் பண்ணி வைத்து விசேஷமாக ஆராதித்தார். அன்று ராத்ரி அங்கிருந்து 1 மைலுள்ள மாங்குடி அக்ரஹாரத்திற்கெழுந்தருளினர். 10-2-55ல் அவ்வூர் வாஸிகள் ஆராதித்தார்கள். அன்று ராத்ரி மறுபடியும் பௌண்டரீக புரமெழுந்தருளியாயிற்று. பௌண்டரீகபுரத்தில் ஸமீபத்தில் கோயிலில் விக்ரஹபிரதிஷ்டையும் நடந்து ஸ்ரீ சடாரியும் ஸ்ரீ லக்ஷ்மிநரசிம்ஹன் அபிமானமாக எழுந்தருளப் பண்ணி யிருப்பதால் ஸ்ரீ லக்ஷ்மீநரசிம்ஹன் கோயிலிலேயே ஒருநாள் எழுந்தருளியிருக்கவேணுமென்று பிரார்த்தித்தபடியால் அன்று கோயிலிலேயே எழுந்தருளியிருந்தார். அன்று கோயிலிலேயே ஆராதித்தார்கள். மறுநாள் காலையில் அபிகமனத்தையும் முடித்துக்கொண்டு அக்ரஹாரத்தில் வீதிவலம்வந்து நெடுந்தெரு ஸ்ரீநரஸிம்ஹாசாரியர் க்ருஹத்திற்கெழுந்தருளினர். அவர் 12–2–55ல் ஆராதித்து டோலோத்ஸவமும் நடத்திவைத்தார். அன்று பௌண்டரீகபுரத்தில் தேவனார்விளாகம் ஸ்ரீவீரராகவாசாரியரும், ஸ்ரீ ஸ்ரீநிவாஸதேசிகாசாரியரும் தங்கள் ஊருக்கு எழுந்தருளி அனுக்ரஹிக்கவேணுமென்று ப்ரார்த்தித்ததின் பேரில் அன்று ராத்ரி புறப்பட்டு 2 மைலுள்ள தேவனார்விளாகத்திற்கு எழுந்தருளியாயிற்று. 13–2–55 அன்று மண்டபத்திலுள்ள எல்லா எம்பெருமான்களுக்கும் ஸ்வாதி திருமஞ்சனம் பண்ணி வைத்துப் பெருமாளுக்கு நல்ல பட்டு ஸமர்ப்பித்தார்கள். ராத்ரி கண்ணனுக்கு டோலோத்ஸவமும் பண்ணி விசேஷமாக ஆராதித்தார்கள். அன்று ஸாயங்காலம் 4 மணிக்கு உப்பிலியப்பன் ஸந்நிதி ட்ரஸ்டிகளும், அவ்வூர் வாஸிகளும் ப்ரார்த்தித்ததின்பேரில் ஸ்ரீ அழகியசிங்கர் மூன்றுந்தரமாக உப்பிலியப்பனை மங்களாசாஸனம் பண்ணியாயிற்று. அன்று ராத்ரி 10 மணிக்குப் புறப்பட்டு 10 மைலுள்ள நாச்சியார்கோயிலுக் கெழுந்தருளினர். அவ்வூர் பாத்திரக்கடை ஸ்ரீ ராஜமய்யங்காரும், அவர் தம்பிகளும் தங்களுடைய க்ருஹத்தில் எழுந்தருளப்பண்ணி, ராத்ரி கண்ணனுக்கு டோலோத்ஸவம் பண்ணிவைத்து விசேஷமாக ஆராதித்தார்கள். அவ்வூர் கோயிலதிகாரிகள் ஸ்ரீ அழகியசிங்கர் திருவுள்ளத்திற்கேற்றபடி இருக்கிறபடியால் பெருமாள் மங்களாசாஸநத்திற்கு எழுந்தருளவேணுமென்று ப்ரார்த்தித்ததின்பேரில், ஸாயங்காலம் 4 மணிக்கு ஸகல பிருதுகளுடன் எழுந்தருளி மங்களாசாஸனம் செய்தருளியாயிற்று. கர்பக்ருஹத்தில் பெருமாள் மங்களாசாஸனம் ஆனதும், அர்ச்சகமுகத்தாலே இன்று திருப்பல்லாண்டு தொடக்கதினமாகையால் அதைத் தொடங்கவேணுமென நியமித்ததை கருடன் ஸந்நிதிக்குமுன்பு கோஷ்டியாயிருந்து திருப்பல்லாண்டு துடங்கி பெருந்திரளாக முழுக்க ஸேவித்து சாத்துமுறை பண்ணியாயிற்று. பிறகு கோஷ்டிக்கு தீர்த்தம், சடாரி முதலியவைகள் வழக்கப்படி நடந்தன. 'பூர்வாச்ரமத்தில் தாயக்ரமமாக நம்பிகைங்கர்யத்தை நடத்திவந்ததை நம்பியுகந்து தாமாகச் சொல்லவேண்டிய வார்த்தையை அவன் நியமித்துச் சொல்லும்படி பண்ணினான் என் நம்பி' யென்று, 'திருமாலே நானுமுனக்குப் பழவடியேன்' என்று ஸேவிக்கும் பொழுது ஸாதிக்கும்படி யிருந்தது. இம்மாதிரி பெருமாளுடைய விசேஷநியமனத்தை முன்னிட்டே நம்பி அத்யாபககைங்கர்யத்தில் ஒரு பாகத்தை மேற்படி ஸந்நிதி கைங்கர்யம் ஶாச்வதமாக நடக்க வேணுமென்று ஸ்ரீ ஸந்நிதி பேருக்கு க்ரயம் வாங்கியாயிருக்கிறது. திருக்குடந்தையிலிருந்தும் மற்றும்பக்கத்தூர்களிலிருந்தும் வந்தவர்களும், ஊரிலுள்ளவர்களும் கோஷ்டியைக் கண்டு அதில் கலந்துகொண்டு களிப்பெய்தினர். இரண்டாங் கட்டளை டாக்டர், ஸ்ரீ மஹாலிங்கய்யர், ஸ்ரீ நரஸிம்ஹ அய்யங்கார் முதலிய ட்ரஸ்டிகள் அவர்கள் ட்ரஸ்டில் கண்ட வேதபாடசாலைக்கு எழுந்தருளி அநுக்ரஹிக்கவேணுமென்று பௌண்டரீகபுரத்திலேயே ப்ரார்த்தித்ததின் பேரில்

14–2–55 ராத்ரி 5 மைலுள்ள இரண்டாங்கட்டளைக்கு எழுந்தருளினர். 15–2–55 அன்று டாக்டர் ஆராதித்தார். வேதபாடசாலையைக் கடாக்ஷித்து வைதிகத்துடன் விருத்தியடைய வேணுமென்று நியமித்து உபாத்யாயர்களுக்கும் வித்யார்த்திகளுக்கும் யதோசிதம் ஸன்மானம் அநுக்ரஹித்தாயிற்று. அன்றிரவு 7 மைலுள்ள வலங்கிமானுக் கெழுந்தருளினர். வழியில் ஸ்ரீ மஹாலிங்கய்யர் க்ருஹத்திலும், நடார் ஸ்ரீ ராஜம்பட்டர் க்ருஹத்திலும், தென்னந்தோட்டம் ஆராவமுதய்யங்கார் க்ருஹத்திலும் பெருமாளை பல்லக்குடன் எழுந்தருளப்பண்ணி, சர்க்கரை விநியோகாதிகளைப் பண்ணி ஸம்பாவனை பண்ணினர்கள். 16-2-55 அன்று வலங்கிமானில் ஸ்ரீ ஸ்ரீநிவாஸதேசிகாசாரியர் ஆராதித்தார். ராத்ரி தில்லையம்பூர் எழுந்தருளினர். 17–2–55 அன்று ஸ்ரீ ரங்காசார்யரும், க்ராமமுன்ஸீப், ஸ்ரீ நரஸிம்ஹாசாரியர் முதலியவர்கள் முன்னின்று டோலோத்ஸவம் பண்ணிவைத்து பெருமாளை விசேஷமாக ஆராதித்தார்கள். அன்றிரவு 14 மைலிலுள்ள ஆடிப்புலியூருக் கெழுந்தருளினர். 18–2–55 அன்று ஊர் வாஸிகளால் ஆராதிக்கப்பட்டு 19-2-55 த்வாதசியன்று ஸ்ரீ வேங்கடத்தய்யங்காரால் ஆராதிக்கப்பட்டார். ராத்ரி டோலோத்ஸவமும் அவர் பண்ணிவைத்தார். அன்றிரவு 2 மைலிலுள்ள பருத்திச்சேரிக்கெழுந்தருளினர். 20-2-55 ல் அவ்வூர் வாஸிகள் ஆராதித்தார்கள். பருத்திச்சேரி வாஸிகளும், ஸ்ரீ ராமஸ்வாமி பட்டாசார்யரும், மற்றும் கோயிலதிகாரிகளும் ஸ்ரீ அழகியசிங்கர் திருவுள்ளம் உகந்து மங்களாசாஸனம் பண்ணும்படி இருக்கிறதென்றும், அவசியம் எழுந்தருளி மங்களாஸாஸனம் பண்ணியருள வேண்டுமென்றும் ப்ரார்த்தித்ததின் பேரில் ஸாயங்காலம் 4 மணிக்கு ஸகலபிருதுகளுடன் 2 மைலிலுள்ள திருச்சேரைக்கெழுந்தருளி ஸ்ரீ ஸாரநாதனை மங்களாஸாஸனம் பண்ணியாயிற்று. 20-2-55 ராத்ரி பருத்திச்சேரியிலிருந்து 4 மைலுள்ள கொடவாசலுக்கு எழுந்தருளினர். 21-2-55 அன்று எல்லா எம்பெருமான்களுக்கும் திருமஞ்சனம் பண்ணிவைத்து விசேஷமாக ஆராதித்தார்கள். அன்றிரவு கண்ணனுக்கு டோலோத்ஸவம் பண்ணிவைத்தார்கள். 22_2-55 ராத்ரி பெருமாளுடன் ஸ்ரீ அழகியசிங்கருக்கு தந்தப்பல்லக்கில் விசேஷ நாதஸ்வரத்துடன் வீதி உத்ஸவம் வெகு விமரிசையாகப் பண்ணிவைத்தார்கள். ஸ்ரீ ரங்கநாதனுக்கு வழிநடை மண்டகப்படி நடப்பது போல் ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹனுக்கு வீதியில் எழுந்தருளும்பொழுது ப்ரார்த்திக்கிறவர்களுடைய க்ருஹங்களில் பல்லக்குடன் பெருமாளை எழுந்தருளப்பண்ணி பெருமாள் ஸம்பாவனை, ஸ்ரீ அழகியசிங்கர் ஸம்பாவனைகள் பண்ணி, சர்க்கரை, பழம், தாம்பூலம் முதலியதுகள் கண்டருளப்பண்ணி விநியோகமாகி ஹாரத்தீ மஞ்சள்நீர் எடுத்து செய்துவரும் வழிநடை மண்டகப்படி உபயம் அவ்வூரிலும் ஐந்து க்ருஹங்களில் நடந்தது. கொடவாசலுக்கு எழுந்தருளின தினத்தில் திருக்குடந்தையிலிருந்து ஸ்ரீ க்ருஷ்ணஸ்வாமி அய்யங்கார், ஸ்ரீ ஆராவமுதாச்சாரியார், ஸ்ரீ கோபாலாச்சாரியார் முதலியவர்கள் திருக்குடந்தை ஸ்ரீ அமுதன் மங்களாஸாஸனத்திற்கு நிச்சங்கமாய் ஸ்ரீ அழகியசிங்கர் எழுந்தருளலாம் என்று மிகவும் ப்ரார்த்தித்தார்கள். எழுந்தருளுவதைப்பற்றி மறுநாள் ஸாதிக்கும்படி இருந்தது. அவர்கள் அதற்குத் தகுந்த ஏற்பாட்டைச் செய்துவருவதாயும், அவசியம் எழுந்தருளவேண்டுமென்றும் ப்ரார்த்தித்துப் போனர்கள். மறுநாள் ஸ்ரீ அமுதன் ஸந்நிதி ட்ரஸ்டிகளான ஸ்ரீ மாதவராவ், ஸ்ரீ டி. எஸ். ராஜகோபாலய்யங்கார், ஸ்ரீ ஆர். கண்ணனய்யங்கார் இவர்களும், ஸ்ரீ கல்யாணராம அய்யங்கார் முதலியவர்களும் கொடவாசலுக்கு வந்து முதல்நாள் அவர்கள் ப்ரார்த்தித்தபடியே அவசியம் ஸ்ரீ ஆராவமுதன் மங்களாஸாஸனத்திற்கு எழுந்தருளவேண்டுமென்றும், அப்படியில்லாமற்போனல் தங்களுக்கும், ஊரார்களுக்கும் மிகவும் குறையாக இருக்குமென்றும், திருவுள்ளத்திற்கு உகப்பாயிருக்கும்படி ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன வென்றும் முதல் நாள் ப்ரார்த்தித்தபடியே இவர்களும் ப்ரார்த்தித்தார்கள். அதன்பேரில் நிமித்தாதிகளைக்கொண்டு பெருமாள் நியமனமான தினுலும் மறு நாள் மேலவடையவிலிருந்து எழுந்

தருளுவதாக ஸாதிக்கும்படி யிருந்தது. அன்றிரவு புறப்பட்டு மேலவடையலுக்கு எழுந்தருளினர். அவ்வூர் வாஸிகள் ஆராதித்தார்கள். அன்றிரவு திருக்குடந்தை ஸ்ரீ அஹோபில மடத்திற்கு எழுந்தருளினர். 24-2-55 அன்று காலை அபிகமந ஆராதனம் முடிந்ததும் ஸகல அரவணை மர்யாதைகளுடன் ஸ்ரீ சடாரியை எழுந்தருளப்பண்ணிக்கொண்டு ஸ்ரீ மடத்திற்கு கோயில் அதிகாரிகள் வந்து ப்ரார்த்தித்ததின் பேரில் ஸகலபிருதுகளுடன் அமுதன் ஸந்நிதிக்கு எழுந்தருளி மங்களாசாஸநம் செய்தருளியாயிற்று. வழக்கம்போல் ஸகல மர்யாதைகளையும் பெற்றுக்கொண்டு ஸ்ரீ மடத்திற்கு எழுந்தருளினர். அன்று மத்யான்ஹம் மூன்று மணிக்கு புறப்பட்டு நாதன்கோயிலுக்கு எழுந்தருளினர். ஸ்ரீவாநமாமலைஜீயர் நியமநப்ரகாரம் கோயிலதிகாரிகள் ஸ்ரீ அழகியசிங்கருக்கு ஸகல மர்யாதைகளுடன் மங்களாசாஸநம் பண்ணிவைத்தார்கள். தாயார்ஸந்நிதியில் ஸ்ரீ லக்ஷ்மீநரஸிம்ஹனை எழுந்தருளப்பண்ணி ராத்ரி ஆராதநத்தை நடத்திவைத்தார்கள். அங்கிருந்து புறப்பட்டு 9 மைலிலுள்ள ஆண்டாள்கோயிலுக்கு எழுந்தருளினர். 25-2-55 அன்று பெரிய பெருமாளுக்கு திருமஞ்சநமும் ராத்ரி கண்ணனுக்கு டோலோத்ஸவமும் பண்ணிவைத்து ஸ்ரீ ஸந்தாநம் அய்யங்கார் விசேஷமாக ஆராதித்தார். அன்றுராத்ரி 15 மைலிலுள்ள இருகறைக்கு எழுந்தருளினர். ஸ்ரீ. என். ஸ்ரீநிவாஸ அய்யங்கார் 26-2-55 அன்று எல்லாப் பெருமாளுக்கும் திருமஞ்சநமும், ராத்ரி கண்ணனுக்கு டோலோத்ஸவமும் பண்ணிவைத்து ஆராதித்தார். அன்றுராத்ரி ஸ்ரீ என். ஆர். ஸ்ரீநிவாஸ அய்யங்கார், ஸ்ரீ குப்புசாமி அய்யங்கார் ஆக இரண்டு பேரும் பெருமாளை தங்களுடைய க்ருஹத்தில் எழுந்தருளப்பண்ணி 27-2-55 அன்று ராத்ரி கண்ணனுக்கு டோலோத்ஸவம் பண்ணிவைத்து ஆராதித்தார்கள். அன்று ராத்ரி 2 மைலிலுள்ள அம்மாப்பேட்டைக்கு எழுந்தருளினர். 28-2-55 அன்று எல்லாப்பெருமாளுக்கும் திருமஞ்சநமும் ராத்ரி ஸ்ரீ கண்ணனுக்கு டோலோத்ஸவமும் பண்ணிவைத்து ஸ்ரீ நாராயண ஐயங்காரும் ஸ்ரீ ஸுந்தராசாரியரும் ஆராதித்தார்கள். அன்று ராத்ரி மறுபடி இருகரைக்கெழுந்தருளினர். 1—3—55 அன்று இருகரைவாஸிகளால் ஆராதிக்கப்பட்டார். குவளைவேலிவாஸிகளின் ப்ரார்த்தனைக்கிணங்க அன்று ராத்ரி குவளைவேலிக் கெழுந்தருளினர். 2-3-55 அன்று அவ்வூர்வாஸிகள் ஸ்ரீ கண்ணனுக்கு டோலோத்ஸவம் பண்ணிவைத்து ஆராதித்தார்கள். அன்று ராத்ரி 3 மைலிலுள்ள நீடாமங்கலம் எழுந்தருளினர். 3-3-55 அன்று ஸ்ரீ பி டி. ராமஸ்வாமி ஐயங்காரும் அவ்வூர்வாஸிகளும் சேர்ந்து எல்லாப் பெருமாளுக்கும் திருமஞ்சநமும் ராத்ரி ஸ்ரீ கண்ணனுக்கு டோலோத்ஸவமும் பண்ணிவைத்து ஆராதித்தார்கள். ராத்ரி அங்கிருந்து 4 மைலிலுள்ள கோயில்வெண்ணிக் கெழுந்தருளியாயிற்று 4-3-55ல் மாஜி பெடரல்கோர்ட் ஜட்ஜ் ஸ்ரீ எஸ். வரதாசாரியருடைய க்ருஹத்தில் பெருமாளை எழுந்தருளப்பண்ணி முதல் நாள் ஆராதிக்கும்படி தெரிவித்திருக்கிறார் என்று விஜ்ஞாபித்து அவர்கார்யஸ்தர் அந்தப்படி ஆராதித்தார். 5-3-55 அன்று ராத்ரி 6.3-55 ஆக இரண்டுநாட்களும் கிராமத்தார்கள் ஆராதித்தார்கள். 5-3-55 ராத்ரி ஸ்ரீ கண்ணனுக்கு டோலோத்ஸவமும் 6-3-55 எல்லா பெருமாளுக்குத் திருமஞ்சனமும் அவ்வூர்வாஸிகளனைவரும்சேர்ந்து நடத்திவைத்தனர். 5-3-55 த்வாதசியன்று அவ்வூரில் பிள்ளைபாக்கம் ஸ்ரீ அழகியசிங்கரின் திருநக்ஷத்ரம் ஸேவை சாற்றுமுறையுடன் நடந்தது. 6-3-55 அன்று 42-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரின் இரண்டாவது வருஷாராதனத்தை யுத்தேசித்து வேத ப்ரபந்த புராண பாராயணாதிகள் தொடங்கப்பட்டன. அன்று ராத்ரி 10 மைலிலுள்ள வடுவூருக்கு எழுந்தருளினர். அன்று ஸ்ரீ அஹோபில மடத்தில் எழுந்தருளப்பண்ணி அவ்வூர்வாஸிகள் ஆராதித்தனர். அன்று காலை அபிகமன ஆராதனம் முடிந்ததும் கோயில் அதிகாரிகளும் அவ்வூர்வாஸிகளும் ஸ்ரீ அழகியசிங்கரின் திருவுள்ளத்திற்கேற்ப ஏற்பாடாகியிருப்பதாகப் ப்ரார்த்தித்ததின்பேரில் கோயிலுக்கு எழுந்தருளி மங்களாஸாஸநம் செய்தருளியாயிற்று. வழக்கம்போல் ஸகல மரியாதை



ஸ்ரீ அழகியசிங்கர் வடுவூர் ஸ்ரீ ராமனை
மங்களாசாஸனம் செய்தருளல்

சளும் நடந்தன. ராத்ரி கோயிலுக்கெழுந்தருளி டோலையில் ஸ்ரீ ராமபிரானை மங்களாஸாஸனம் செய்தருளியாயிற்று. 8-3-55 அன்று ஸ்ரீ எஸ். க்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார் எல்லா பெருமாளுக்கும் திருமஞ்சனம் பண்ணிவைத்தார். 9-3-55 அன்று 42-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரின் வருஷாராதனம் காலையில் நாலாயிர திவ்ய ப்ரபந்த பாராயணமும் அஸீதி வேதபாராயணமும் சாற்றுமுறை ஸம்பாவனை ஸ்ரீபாததீர்த்தங்களுடன் நடந்தன. மத்யாந்ஹம் வழக்கம்போல் ஆராதனம் ஆச்ரமத்திலும் நடந்தது. அவ்வூர் வாஸிகள் ராத்ரி சண்ணனுக்கு டோலோத்ஸவம்பண்ணிவைத்து விசேஷமாக ஆராதித்தார்கள். ராத்ரி அங்கிருந்து 6 மைலிலுள்ள சம்பயநத்தம் எழுந்தருளினர். 10-3-55 அன்று ஸ்ரீ ரங்கநாதஐயங்கார், ஸ்ரீநாராயண ஐங்கார் முதலியவர்கள் பெரிய பெருமாளுக்குத் திருமஞ்சனம் பண்ணிவைத்து ஆராதித்தார்கள். வடுவூர்வாஸிகளின் ப்ரார்த்தனைக்கிணங்க ராத்ரி மறுபடியும் வடுவூருக் கெழுந்தருளினர். ஸ்ரீ ராகவஐயங்கார், ஸ்ரீநரஸிம்ஹ ஐயங்கார் ஆக இரண்டுபேரும் தங்களுடைய க்ருஹத்திற்கு எழுந்தருளவேண்டுமென்றுப்ரார்த்தித்ததின் பேரில் அவர்கள்க்ருஹத்திற்கு எழுந்தருளியாயிற்று.

(தொடரும்)

ஸ்ரீ அஹோபிலமடம் 42-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரின் 2-வது வர்ஷாராதனமஹோத்ஸவம் திருவுள்ளூரில் ஸ்ரீ அழகியசிங்கரது ப்ருந்தாவனத்தில் 4 நாள் முன்னதாக வேத ப்ரபந்தபாராயணங்களுடன் உபக்ரமிக்கப்பட்டு 9-3-55ல் சாற்றுமுறையுடன் வெகுவிமர்சையாக நடந்தேறியது. ஆராதனதினத்தன்று ஸ்ரீவீரராகவன் ஸந்நிதியிலிருந்து மரியாதைகள் வழக்கப்படி சத்ரசாமரங்களுடன் வந்து சாற்றுமுறையும், ஸம்பாவனை, கோஷ்டிகளும் நன்றாக நடந்தன. விசேஷ ததீயாராதனமும் நடந்தது. மதுராந்தகம், பெருமாளகோயில் முதலியவிடங்களிலிருந்து ஸ்வாமிகள் பாராயணத்திற்கெழுந்தருளியிருந்தார்கள். எல்லோருக்கும் உசிதமான ஸம்பாவனை செய்யப்பட்டது. ஸ்ரீ ஆதிவண்சடகோப யதீந்த்ரமஹாதேசிகன் கைங்கர்ய ஸபையோர்களின் ப்ரார்த்தனைக்கிணங்க ஷை ஸபையின் சார்பில் ஸ்ரீ அஹோபிலமடம் ஸ்ரீகார்யம், ஸ்ரீ.உ.ப. வித்வான், தையார், ஜோஸ்யம் ரங்காசார்யஸ்வாமி ‘ஆசார்யவைபவம்’ பற்றியும், ஸ்ரீஸந்நிதி ஆராதகர் ஸ்ரீ. உ.ப. வித்வான், ப்ரஹ்மதேசம், தூப்புல் ராமாநுஜாசார்ய ஸ்வாமி ‘ஸத்ஸங்கவைபவம்’ பற்றியும், ஸ்ரீ அஹோபிலமடம் ஆஸ்தானவித்வான், ஸ்ரீ. உ.ப., முக்கூர் ராஜகோபாலாசார்யஸ்வாமி ‘சரணாகதிவைபவம்’ பற்றியும் உபந்யாஸம் செய்தார்கள். ஷை வித்வான்களுக்கு ஸபையோர்களால் க்ருதஜ்ஞதாநுஸந்தானம் பண்ணப்பட்டு கடைசியில் ஒவ்வொருநாளும் வேதபாராயணங்களுடன் கோஷ்டிக்கு சந்தனதாம்பூலாதிகள் வழங்கப்பட்டன.

S. க்ருஷ்ணஸ்வாமி, B.A., B.L. அட்வகேட்.

(60-வது பக்கத்தின் தொடர்ச்சி)

[தன்னை ஆச்ரயித்த சிஷ்யர்களுக்கு ஸ்ரீ பாஷ்யம் முதலிய க்ரந்தங்களையும், ஸகலஜனங்களுக்கும் ஸகலவித நன்மையையளிக்கும் ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரத்தையும், ஸ்ரீ நம்மாழ்வார் திவ்யஸூக்தியான திருவாய்மொழி முதலிய திவ்யப்ரபந்தங்களையும் ஸகலர்களின் நெஞ்சில் பதியும்படியான தனது இன் சொற்களால் ஸர்வகாலமும் உபதேசித்துக்கொண்டு பரம ஸந்தோஷபரிதராய் எழுந்தருளியிருந்த வாதூலகுலதிலகரான ஸ்ரீநிவாஸாசார்யஸ்வாமி என்ற வித்வதக்ரேஸரர் ஸ்ரீ வைகுண்டத்தையடைந்தார்.]

𑌵𑍇𑌦𑌾𑌨𑍍𑌤𑍇 𑌪𑌾𑌣𑌿𑌨𑍀𑌯𑍇 𑌕𑌣𑌭𑍁𑌗𑌭𑌿𑌮𑌤𑍇 𑌜𑍈𑌮𑌿𑌨𑍀𑌯𑍇 𑌚 𑌤𑌨𑍍𑌤𑍍𑌰𑍇
𑌨𑌿𑌷𑍍𑌣𑌾𑌤𑌃 𑌪𑌾𑌞𑍍𑌚𑌰𑌾𑌤𑍍𑌰𑍇 𑌸𑍍𑌮𑍃𑌤𑌿𑌷𑍁 𑌬𑌹𑍁𑌵𑌿𑌧𑌾𑌸𑍍𑌵𑌪𑍍𑌰𑌤𑌿𑌦𑍍𑌵𑌨𑍍𑌦𑍍𑌵𑌸𑌿𑌦𑍍𑌧𑌿𑌃 ।
𑌶𑌿𑌷𑍍𑌟𑌾𑌨𑌾𑌮𑌗𑍍𑌰𑌗𑌣𑍍𑌯𑌃 𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌵𑌿𑌹𑌿𑌤𑌸𑌦𑌾𑌚𑌾𑌰𑌮𑌾𑌰𑍍𑌗𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌾-
𑌬𑌦𑍍𑌧𑌶𑍍𑌰𑌦𑍍𑌧𑌃 𑌪𑍍𑌰𑌪𑍇𑌦𑍇 𑌹𑌰𑌿𑌚𑌰𑌣𑌯𑍁𑌗𑌂 𑌶𑍍𑌰𑍀𑌨𑌿𑌵𑌾𑌸𑌾𑌰𑍍𑌯𑌸𑍂𑌰𑌿𑌃 ॥ 2

[வேதாந்தம், வியாகரணம், தர்க்கம், மீமாம்ஸை என்ற நான்கு சாஸ்த்ரங்களிலும் பாரங்கதராய், மந்வாதிஸ்ம்ருதிகளிலும், பாஞ்சராத்ரம் முதலிய தர்மசாஸ்த்ரங்களிலும், நிகரற்ற பாண்டித்யமுள்ளவராய், சிஷ்டர்களுக்குள் முதலில் எண்ணத்தக்கவராய், வேதத்தில் விதிக்கப்பட்ட ஸதாசாரமார்க்கத்தை நிலைநாட்டுவதில் மிகுந்த ச்ரத்தையுள்ளவராய் எழுந்தருளியிருந்த ஸ்ரீநிவாஸாசார்யஸ்வாமி ஸ்ரீவைகுண்டத்தில் ஸ்ரீமந்நாராயணனுடைய திவ்யசரணாரவிந்தங்களில் 'ஒழிவில்கால' த்தின்படி ஸர்வவிதகைங்கர்யங்களையும் பண்ணிக்கொண்டு எழுந்தருளியிருக்கிறார்.]

𑌪𑍍𑌰𑌖𑍍𑌯𑌾𑌤𑍇 𑌵𑍈𑌚𑌕𑍍𑌷𑌣𑍍𑌯𑌂 [illegible]
𑌪𑍍𑌰𑌸𑌿𑌦𑍍𑌧𑌂 𑌵𑍈𑌦𑌗𑍍𑌧𑍍𑌯𑌂 𑌸𑌕𑌲𑌹𑍃𑌦𑌯𑌾𑌕𑌰𑍍𑌷𑌿 𑌵𑌚𑌨𑌮𑍍 ।
𑌵𑌿𑌶𑍁𑌦𑍍𑌧𑍋𑌪𑌨𑍍𑌯𑌾𑌸𑌂 𑌸𑌰𑌸𑌮𑌧𑍁𑌰𑌂 𑌮𑌾𑌧𑌵𑌪𑌦𑍇
𑌕𑍍𑌵 𑌵𑌾 𑌭𑌕𑍍𑌤𑌿𑌂 [illegible] 𑌪𑌶𑍍𑌯𑍇𑌮 𑌭𑍁𑌵𑌨𑍇 ॥ 3

[ப்ரஸித்தமான வைதுஷ்யம், ஸகலஜனங்களின் மனத்தைக் கவரும் வாக்சாதுர்யம், ஸரஸமதுரமாய் விசுத்தமான உபந்யாஸம், ஸ்ரீ மாதவனிடத்தில் அநந்யப்ரயோஜனமான பக்தி, இந்த நற்குணங்கள் ஸகல வித்வான்களாலும் ஒருமுகமாகக் கொண்டாடப்பட்ட ஸ்ரீநிவாஸாசார்யஸ்வாமியினிடத்தில் குடிகொண்டிருந்தன. அந்த ஸ்வாமி ஸ்ரீவைகுண்டத்திற்கு எழுந்தருளின பிறகு இந்த நற்குணங்களை விசாலமான இவ்வுலகில் எங்கு காண்போம்?]

𑌤𑍍𑌰𑌯𑍀𑌶𑌿𑌰𑍋𑌦𑍇𑌶𑌿𑌕𑌪𑍍𑌰𑌵𑌰𑌦𑌰𑍍𑌶𑌨𑌸𑍍𑌯𑌾𑌗𑍍𑌰𑌿𑌮𑍋
𑌧𑍍𑌵𑌜𑌃 𑌪𑍍𑌰𑌥𑌿𑌤 [illegible] ।
[illegible]
[illegible] ॥ 4

[பெரியோர்களால் கொண்டாடப்படும் பாண்டித்யப்ரகர்ஷத்தால் ஸ்ரீ தேசிகதர்சன

விஜயத்வஜரென்று ப்ரஸித்தராய், ஶாப்திகாக்ரேஸரராய் எழுந்தருளியிருந்த இந்த ஸ்ரீநிவாஸாசார்யஸ்வாமி நமது அபாக்யத்தால் பரமபதமெய்திஞர்போலும்.]

சின்னமு, ஸ்ரீநிவாஸ பாட்ராசாரியர், திருக்குடந்தை.

99555

3

[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥ 1

[வாதூலவம்ஶத்தில் அவதரித்தவராயும், சதுःஶாஸ்த்ரகல்பதரு. சேஷாசார்யஸ்வாமியிடத்தில் யதாக்ரமமாக வியாகரணதி ஶாஸ்த்ராப்யாஸம் பண்ணி, பிறகு மஹாமஹிமையுடையராயெழுந்தருளியிருந்த ஸ்வர்ணர், ஸ்ரீ க்ருஷ்ணமார்யமஹாதேசிகனிடத்திலிருந்து வேதாந்தஜ்ஞாநத்தையும் அடைந்து ஸ்ரீநிவாஸசார்யஸ்வாமி நல்ல சீலவ்ருத்தாதிகளுடன் விளங்கிஞர்.]

[illegible] ।
[illegible] ॥ 2

[புத்தன்கோட்டகம் ஸ்ரீநிவாஸாசார்யஸ்வாமி, தேசிகதர்ஶனவிஜயத்வஜரென்று பிருதாலங்க்ருதராய், இப்புவியில் ஸாதுக்களுக்கெல்லாம் உவமையாக எழுந்தருளியிருந்தார்.]

[illegible] ।
[illegible] ॥ 3

[ஸ்ரீ ஸ்வாமி, பீஷ்மரைப்போல், ஜிதேந்த்ரியராயும், ஜ்ஞாநம், வயது, சீலம் இவைகளுடைய முதுமையை அடைந்து, அநேகவிதமான தர்மங்களை உபதேசம் செய்து உத்தராயணத்தில் மோக்ஷத்திற்கெழுந்தருளிஞர்.]

மதுராந்தகம், தி. ஈ. வீரராகவாசாரியார், திருவையாறு.

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியாவில் விளம்பரம் செய்வோருக்கு அடியிற் கண்டபடி கட்டண விகிதங்களில் மாறுதல் செய்யப்பட்டிருக்கிறது.

அட்டை 4-வது பக்கம் முழுவதும் ஒரு தடவைக்கு ரூ 25—0—0
ஒரு வருஷத்திற்கு ரூ 250—0—0 அரை வருஷத்திற்கு ரூ 125—0—0
உள்பக்கங்களில்: ஒரு பக்கம் ஒரு தடவைக்கு ரூ 20—0—0
ஒரு வருஷத்திற்கு ரூ 200—0—0 அரை வருஷத்திற்குரூ 100—0—0

அரை, கால் பக்கங்களுக்கும், மற்றும் சலுகை விளம்பரங்களுக்கும், மற்ற நியமங்களுக்கும் மானேஜர், ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா, திருவள்ளூர் என்ற விலாஸத்திற்கு எழுதவும்.

ஸ்ரீ:

பஞ்சாங்க ஸங்க்ரஹம்

ஜயஹு – பங்குனி மீ 1955 ஹு மார்ச்சு – ஏப்ரல் மீ

[உத்தராயணம் சிசிர ருது - மீனமீ]

14–3–55	பங்குனிமீ 1உ	திங்கட்கிழமை	மீன ரவி 24-7; ஷடசீதி; ஸங்க்ரமண தர்ப்பணம்; கும்பக்ருஷ்ண ஷஷ்டி திதி.
19–3–55	6உ	சனிக்கிழமை	ஏகாதசி திதி.
20–3–55	7உ	ஞாயிற்றுக்கிழமை	ஏகாதசி வ்ரதம்; த்வாதசி திதி.
21–3–55	8உ	திங்கட்கிழமை	த்ரயோதசி திதி.
22–3–55	9உ	செவ்வாய்க்கிழமை	சதுர்தசி திதி.
23–3–55	10உ	புதன்கிழமை	● அமாவாஸ்யை.
1–4–55	19உ	வெள்ளிக்கிழமை	நவமி - தசமி திதித்வயம், ஸ்ரீராமநவமி.
2–4–55	20உ	சனிக்கிழமை	ஏகாதசிதிதி.
3–4–55	21உ	ஞாயிற்றுக்கிழமை	ஏகாதசிவ்ரதம்.
5–4–55	23உ	செவ்வாய்க்கிழமை	பங்குனி உத்திரம்.
6–4–55	24உ	புதன்கிழமை	○ பூர்ணிமைதிதி.
7–4–55	25உ	வியாழக்கிழமை	ஹஸ்தம்; திருவரங்கத்தமுதனர் திரு நக்ஷத்ரம்; ப்ரதமை திதி.
8–4–55	26உ	வெள்ளிக்கிழமை	அதிதி.
9–4–55	27உ	சனிக்கிழமை	த்விதீயைதிதி.
13–4–55	31உ	புதன்கிழமை	மீன - க்ருஷ்ண ஷஷ்டிதிதி; மேஷரவி–44–29; சித்திரை விஷுஸங்க்ரமண தர்ப்பணம்; வருஷப்பிறப்பு.

ஓர் செய்தி

நாளது ஜயஹு தைமீ 24உ நீர்வளூர் அக்ரஹாரத்தில் லக்ஷ்மீநாராயணப்பெருமாள் ஸந்நிதியில், ஸ்ரீ அஹோபிலமடம் 43 வதுபட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீமத்வேதமார்க்கேத்யாதி ஸ்ரீவண்சடகோப ஸ்ரீவீரராகவசடகோபயதீந்த்ரமஹாதேசிகனுடைய திவ்யநியமநத்தின்பேரில் ஸ்ரீஅழகியசிங்கரால் அநுக்ரஹிக்கப்பட்ட ஸ்ரீமதாதிவண்சடகோபயதீந்த்ரமஹாதேசிகன் திவ்யமங்களவிக்ரஹப்ரதிஷ்டையும், ஸ்ரீ.உ.ப.என் ராஜகோபாலாசாரியார், என். ரங்காசாரியார், மரகதவல்லி அம்மாள் இவர்களால் முறையே ஸமர்ப்பிக்கப்பட்ட விமாநகலசம், ஸ்ரீஸுதர்சநாழ்வான், ஸ்ரீசடாரி ப்ரோக்ஷணமும், ஸ்ரீ அஹோபிலமடம் ஆதீநத்தைச்சேர்ந்த திருஎவ்வுளூர் ஸ்ரீ வீரராகவன்ஸந்நிதி அர்ச்சகர் ஸ்ரீ. உப. அத்தி. நரஸிம்ஹாசார்யஸ்வாமியையும், ஸ்ரீ. உப. அழிசூர். ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமியையும் கொண்டு வெகுவிமரிசையாக நடத்தப்பட்டது. ஸம்ப்ரோக்ஷணதிநத்தன்று ஸ்ரீ வீரராகவன் ப்ரஸாதமான மாலை, திருப்பரியட்டம், அபயஹஸ்தம் இவைகள் சத்ர சாமராதிகள் புடைசூழ அக்ரஹாரப்ரதக்ஷிணமாக எழுந்தருளப்பண்ணப்பட்டு அருளப்பாடிட்டு ஸ்ரீமதாதிவண்சடகோபயதீந்த்ரமஹாதேசிகனுக்கு ஸமர்ப்பிக்கப்பட்டது.

N. ராஜகோபாலாசாரியர், N. சடகோபன், E. சேஷாத்ரி, O. K. ரங்காசாரியர்.

Regd. No. M. 4437.

யுனைடெட் இந்தியா பிராவிடெண்ட்
இன்ஷூரன்ஸ் கம்பெனி லிமிடெட்,

ஹெட் ஆபீஸ். "யுனைடெட் இந்தியா லைப் பில்டிங்", சென்னை-1

250, 500, 750, 1000 ரூபாய்கள் வரை
வைத்தியப் பரீக்ஷை இல்லாமலே
பாலிஸிகள் வழங்கப்படுகின்றன.

1000 ரூபாய்க்கு வருஷம் ஒன்றுக்கு போனஸ் ரூ. 9

* பிராவிடெண்ட் இன்ஷூரன்ஸ் கம்பெனிகளின் சரித்திரத்திலேயே தனிச்சிறப்பு வாய்ந்தது *

எங்கும் ஏஜண்டுகள் தேவை

எங்கள் ஏஜென்ஸி கௌரவம் வாய்ந்தது.
லாபகரமானது.
ஆர்வமுடைய இளைஞர்களுக்கு எதிர்காலத்தில் நல்ல
சந்தர்ப்பங்கள் இருக்கின்றன.

விபரத்திற்கு அடியில் கண்ட விலாஸத்திற்கு எழுதுக:

காரியதரிசி,
யுனைடெட் இந்தியா பிராவிடெண்ட் அஷ்யூரன்ஸ்
கம்பெனி லிமிடெட்
யுனைடெட் இந்தியா லைப் பில்டிங், சென்னை-1

Printed & Published by Sri J. Rangachariar Swami, Srikaryam,
Sri Ahobilamutt, at Sri Malola Press, 30. Panagal Street, Tiruvallur.
Editor Eachambadi, T. Ramaswami Aiyangar, M. A., L. T.
Sri Ahobilamutt Sanskrit College, Madurantakam.